IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives

ஆண்டு:01 -வெளியீடு:-04- ஜூலை 2023

சர்வ் சகார், சர்வ் ஸ்கார்

# சஹ்கார் உதய்






# என்.சி.டி.சி ட்டுறவு துறை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது

சர்வ் சகார், சர்வ் ஸ்கார்

# சஹ்கார் உதய்

ஜூலை 2023, இதழ்-4, ஆண்டு-1

ஆசிரியர் குழு
(தலைமை ஆசிரியர்)
சந்தோஷ் குமார் சுக்லா

ஆசிரியர்
ரோஹித் குமார்

உதவி ஆசிரியர்
அஞ்சலிதீப்

உறுப்பினர்கள்
மாதவி எம்.விப்ரதாஸ்
விவேக் சக்சேனா
ஹிதேந்திர பிரதாப் சிங்
ரஷீத் ஆலம்

ஏதேனும் பரிந்துரை அல்லது புகார்களுக்கு தொடர்பு கொள்ளவும்
sahkaruday@iffco.in


இணை பொது மேலாளர்
(கூட்டுறவு வளர்ச்சி)
இப்கோ சதன், சி-1, மாவட்ட மையம், சாகேட் பிளேஸ், புதுடெல்லி-110017

நீங்கள் எங்களை இங்கு தொடர்பு கொள்ளலாம்:

Iffco.coop

IFFCO_PR

Iffco_coop




வெளியீட்டாளர்: இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட்.
அச்சுப்பொறி: ராயல் பிரஸ்
ஒக்லா, புது தில்லி.

## தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC) கூட்டுறவு துறை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது

பிரதமர் திரு நரேந்திர மோடி தனது "சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) என்ற தொலைநோக்குப் பார்வை மூலம் கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்புடைய மக்களின் வாழ்க்கையை நேர்மறையான முறையில் மாற்ற உறுதிபூண்டுள்ளார்.

பக்கம் 08



பக்கம் 14

**கணினி மயமாக்கல் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான பிரதம மந்திரியின் உந்துதல்.**



ஜி20 இந்திய தலைமையின் கீழ் வாரணாசியில் நடைபெற்ற ஜி20 மேம்பாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில், இந்தியாவில் கணினி மயமாக்கலால் மாற்றத்தக்க தாக்கத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி எடுத்துரைத்தார்.

பக்கம் 19

**உணவு சேமிப்பு திட்டம் ஊரக இந்தியாவில் புரட்சியை ஏற்படுத்தும்: பி.எல்.வர்மா**

பக்கம் 20

**இஃப்கோ, தூய்மை மற்றும் பசுமை இந்தியா என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை நடைமுறைப்படுத்த உறுதியளித்துள்ளது**

பக்கம் 24

**இஃப்கோ வேளாண் உதவி மையங்கள் பள்ளிக்கூடங்களை வெற்றிகரமாக நடத்துகிறது**

பக்கம் 15

**உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறு பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்**

உலகளவில் வேளாண்மைத் துறை எதிர்கொள்ளும் பல பிரச்சனைகளை வலியுறுத்திய பிரதமர் திரு நரேந்திர மோடி, உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கூட்டு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க ஜி20 வேளாண்மைத் துறை அமைச்சர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.

பக்கம் 16

**புதிய கூட்டுறவு கொள்கை கூட்டுறவு இயக்கத்தை விரைவுபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது**

பக்கம் 18

**எளிய வழிமுறைகளில் தொழில் செய்வது கூட்டுறவு துறையை மேம்படுத்தும்: அமித் ஷா**



பக்கம் 23



**இஃப்கோவின் நானோ யூரியா அமெரிக்காவில் அதிர்வலைகளை உருவாக்குகிறது**

# தொகுப்புரை

கூட்டுறவு என்பது தன்னார்வத்துடன் ஒன்றிணைந்த மக்களின் பொதுவான பொருளாதார, சமூக கலாச்சார தேவைகள் மற்றும் மனக்கிடக்கைகளை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட, அனைவரும் கூட்டாகப்

பொறுப்பு வகிக்கும் தன்னாட்சி அமைப்பாகும். இதனை மக்கள் நலம் பேணும் அமைப்பாகத் திறம்பட இயக்குவது தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (என்.சி.டி.சி) போன்ற சில முக்கிய நிறுவனங்களின் பொறுப்பாகும்.

1963 ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட என்.சி.டி.சி தற்போது நாடு முழுவதும் 18 மண்டல அலுவலகங்களைக் கொண்டுள்ளது, டெல்லியில் தலைமையகம் உள்ளது. வேளாண்மை, உரம், சர்க்கரை, ஜவுளி மற்றும் உணவு தானியங்கள் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு என்.சி.டி.சி சிறந்த வாய்ப்புகளை வழங்குகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநிலக் கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடு (பிரிவு 43 பி) குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுகளின்படி கூட்டுறவுகளை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் என்.சி.டி.சி வெற்றிகரமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது, இது பாராட்டப்பட வேண்டும்.

கூட்டுறவு அமைச்சகத்தின் உருவாக்கம் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் முயற்சிகளுக்கு மேலும் ஊக்கம் அளித்தது. ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.அமித்ஷாவின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளித்து, அதை வலுப்படுத்தி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் முன்மாதிரியாக மாற்றுவதற்கு, கூட்டுறவு அமைச்சகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. செயல்பாட்டில் உள்ள ஏறத்தாழ 63,000 முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்கள் (PACS) நாடு முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு, அவற்றின் செயல்திறனை அதிகரிக்கவும், அவற்றின்

செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வைக் கொண்டு வரவும் மற்றும் அவர்களின் வணிகத்தை பல்வகைப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகின்றது.

நாடு முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்கள் (PACS), சுமார் ₹2,500 கோடி மதிப்பிலான இந்த லட்சிய திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன, இது பல்வேறு அமைச்சகங்களின் முக்கியமான திட்டங்கள் பற்றிய விரிவான தகவல்கள் ஒரே இடத்தில் கிடைப்பதை உறுதி செய்யும். இந்த கடன் சங்கங்களின் கணினிமயமாக்கல் புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் கூட்டுறவு அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

ஏழு அடிப்படைக் கொள்கைகளை அடித்தளமாக்கொண்டு கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்றன, ஜனநாயகக் கட்டுப்பாடு ஒரு முக்கிய இலட்சியமாக உள்ளது. சமீபத்தில், இந்திய உழவர்கள் உர கூட்டுறவு லிமிடெட் (IFFCO) அதன் 52வது ஆண்டு பொதுக் கூட்டத்தை (ஏ.ஜி.எம்) புது தில்லியில் நடத்தியது. உறுப்பினர் சங்கங்களின் நிதிச் செழுமையை உறுதி செய்வதற்காக அதன் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, இஃப்கோ 2022-23 ஆம் ஆண்டிற்கான 20% ஈவுத்தொகையை அறிவித்தது, முந்தைய ஆண்டுகளின் பாரம்பரியத்தைத் தொடர்கிறது. மேலும், “சங்கர்ஷ் கா சுக்” (இந்தி மொழி) மற்றும் “தி ஜாய்ஸ் ஆப் கிரிசிஸ்” (ஆங்கில மொழி) ஆகிய புத்தகங்கள் இஃப்கோவின் 2023 ஏ.ஜி.எம் இல் வெளியிடப்பட்டன. இந்தப் புத்தகங்கள் இந்திய கூட்டுறவுகளின் முன்னோடியும் இஃப்கோவின் நிர்வாக இயக்குநருமான முனைவர் உதய் சங்கர் அவஸ்தியின் வாழ்க்கை வரலாறை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டு புத்தகங்களும் கூட்டுறவு இயக்கத்தை வெற்றியடையச் செய்வதற்குப் பின்னால் உள்ள போராட்டங்களை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த குறிப்பிடத்தக்க புத்தகங்கள் வெற்றியடைய “சஹ்கர் உதய்” குழு தனது வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறது. “சஹ்கர் உதய்” இதழின் இந்த மாத இதழில் என்.சி.டி.சி மற்றும் இஃப்கோ ஆண்டு பொது கூட்டங்கள் பற்றிய விரிவான வகையில் மற்ற முக்கிய கருப்பொருள் தகவல்களும் உள்ளன.

பல்வேறு மொழிகளில் இந்த இதழ் பிரபலமடைந்து வருவதாலும், எங்கள் வாசகர்களிடமிருந்து வரும் ஊக்கமளிக்கும் செய்திகளாலும் ஈர்க்கப்பட்டு, இந்த இதழ் மேலும் தாக்கத்தையும் சுவாரஸ்யத்தையும் ஏற்படுத்தும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். தற்போதைய வெளியீட்டையும் நீங்கள் ரசிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

*நன்றி! வணக்கம்!*
*‘ஜெய் சஹ்கார்’*





கடந்த 9 ஆண்டுகளில் வேளாண் உடன்பிறப்புகளின் நலன் கருதி பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த தொடரில் இன்று, காரீ்ஃப் பயிர்களுக்கான உயர்நிலைச் சார்பு விலைப்பட்டியலை அதிகரிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உழவர்களுக்கு விளைபொருட்களுக்கான லாபகரமான விலை கிடைப்பதுடன், பயிர்களை பல்வகைப்படுத்துவதற்கான முயற்சிகளும் வலுப்பெறும்.

**திரு நரேந்திர மோடி, பிரதமர்**

கூட்டுறவு சங்கங்களுடன் தொடர்புடைய கோடிக்கணக்கான உழவர்களின் வருவாயை அதிகரிக்க மோடி அரசு மேலும் ஐந்து முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. இந்த முக்கிய முடிவுகள் தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களின் வருமானத்தை அதிகரிக்கும், அத்துடன் ஊரகங்களில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் மற்றும் உழவர்கள் உள்ளூர் அளவில் உரங்கள், பூச்சிக்கொல்லிகள், விதைகள் மற்றும் வேளாண்மை இயந்திரங்களைப் பெற முடியும்.

**திரு அமித் ஷா**

**ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்**



பிரதமர் திரு நரேந்திர மோடியின் அரசாங்கம் நாட்டில் உள்ள 1,514 நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்த நான்கு முக்கிய முயற்சிகளை தொடங்கியுள்ளது, இது “சஹகர் சே சம்ரித்தி” (கூட்டுறவு மூலம் வளர்ச்சி)யின் தொலைநோக்கு பார்வையை நனவாக்க உதவும்.

**பிஎல் வர்மா**

இந்திய அரசின் ஒத்துழைப்புக்கான மாநில அமைச்சர்



இஃப்கோ நானோ யூரியா, இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது, ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கும் உலகின் முதல் உரமாகும். இஃப்கோ நானோ யூரியா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது, இது தொடர்பான ஒப்பந்தம் இஃப்கோ மற்றும் கலிபோர்னியாவின் கபூர் எண்டர்பிரைசஸ் இன்க் இடையே கையெழுத்தானது.

**திலீப் சங்கனி**

தலைவர், இஃப்கோ



இஃப்கோ நானோ டிஏபி பயிருக்கு போதுமான அளவு நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸை வழங்குகிறது. விதை முளைக்கும் வேகத்தையும் அதிகரிக்கிறது. வேளாண் உடன்பிறப்புகள் தங்கள் பயிர்களில் நானோ டிஏபி (திரவம்) பயன்படுத்த வேண்டும்.

**முனைவர் உதய் சங்கர் அவஸ்தி**

நிர்வாக இயக்குனர் மற்றும் முதன்மை செயல் அலுவலர், இஃப்கோ

பிரதமர் திரு நரேந்திர மோடியின் “சஹகர் சே சம்ரித்தி” (கூட்டுறவு மூலம் வளர்ச்சி)யின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க, நாட்டில் உள்ள 1,514 நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை (யுசிபி) வலுப்படுத்த நான்கு முக்கிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுத்துறை அமைச்சகம்**

# பி.ஏ.சி.எஸ் 2,000 மக்கள் மருந்தக மையங்களை திறக்க அனுமதி பெறுகிறது

**சஹ்கார் உதய் குழு**

கூட்டுறவுகள் மூலம் ஊரகங்களில் செழிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்ற அரசாங்கம் மற்றொரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது. கூட்டுறவு அமைச்சகம், ஊரகங்களில் உள்ள உழவர்கள் மற்றும் ஏழைகளுக்கு மலிவு விலையில் மருந்துகளை வழங்குவதற்கான ஒரு ஊடகமாக தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களை (பிஏசிஎஸ்) உருவாக்கியுள்ளது.

நாடு முழுவதும் பிரதான் மந்திரி மக்கள் மருந்தக மையங்களைத் திறக்க 2,000 தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த முடிவின் மூலம் ஊரகங்களில் உள்ள உழவர்கள், ஏழைகள் மற்றும் வேளாண்மைக் கூலித் தொழிலாளர்களின் மருத்துவச் செலவு வரலாறு காணாத அளவில் குறையும்.

இந்த முடிவு பிரதமர் திரு நரேந்திர மோடியின் "சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு படியாகும். ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா, ஒன்றிய சுகாதாரம், ரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் திரு மன்சுக் எல் மாண்டவியாவுடன் நடத்திய கூட்டத்தில் இந்த முக்கிய முடிவை எடுத்தார். பி.ஏ.சி.எஸ் இன் வருவாயை அதிகரிப்பதுடன், ஊரகப்பகுதி மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளையும் இது உருவாக்கும்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள், 2,000 மக்கள் மருந்தக மையங்களில் 1,000 செயல்படும். மீதமுள்ள 1,000 மையங்கள் டிசம்பர் மாதத்திற்குள் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு அமைச்சகத்தின் பொது சேவை திட்டங்களை விரிவுபடுத்துவதில் தொடக்க வேளாண்மைக் கடன் சங்கம் இன் முக்கிய பங்கு வகிக்கிறது. பெட்ரோல் பம்புகள் மற்றும் எரிவாயு ஏஜென்சிகளை இயக்க தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களை அனுமதிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க முடிவு சிறிது காலத்திற்கு முன்பு



எடுக்கப்பட்டது. தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களுக்கு மக்கள் மருந்தக மையங்களை நிருவிக் கொள்வதன் மூலம் கூடுதலான பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

ஊரகங்களில் தொடக்க நல்வாழ்வு மையங்கள் இருந்தபோதிலும், மருந்துகள் எப்போதும் விலை உயர்ந்தவை. இந்த மக்கள் மருந்தக மையங்கள் மூலம் இந்தியாவில் முதல் முறையாக மலிவான மருந்துகள் கிடைக்கின்றன. இதுவரை, நாடு முழுவதும் 9,400க்கும் மேற்பட்ட மக்கள் மருந்தக மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இந்த மக்கள் மருந்தக மையங்களில் 50% முதல் 90% வரை குறைந்த விலையில் மருந்துகள் கிடைத்தாலும், ஊரகப்பகுதிகளில் இந்த மையங்களின் வரவேற்பு குறைவாகவே இருந்தது. பி.ஏ.சி.எஸ் மூலம் மக்கள் மருந்தக மையங்கள் திறக்கப்படுவதால், ஊரகங்களில் மலிவான மருந்துகளும் கிடைக்கும். இதனால் ஊரகங்களில் வசிக்கும் மக்களுக்கு சிகிச்சை செலவும் குறையும்.

> "விலை உயர்ந்த மருந்துகள் கூட நாடு முழுவதும் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்பது நமது அரசின் முன்னுரிமைகளில் ஒன்றாகும். கூட்டுறவுத் துறையில் மக்கள் மருந்தக மையங்களைத் திறக்கும் இந்த முயற்சி ஊரகங்களில் வாழும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் என்று எனக்கு முழு நம்பிக்கை உள்ளது."
>
> **திரு நரேந்திர மோடி**
> **பிரதமர்**

## மக்கள் மருந்தக மையங்கள் நிறுவுவதற்கான தகுதி அளவுகோல்கள்

- விண்ணப்பத்தின் விலை ₹5,000. பெண் தொழில்முனைவோர், 'திவ்யாங்', பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோர் சிறப்பு பிரிவின் கீழ் உள்ளனர். சிறப்புப் பகுதிகளில் இமயமலைப் பகுதி, வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் தீவுகள் ஆகியவை அடங்கும். குறிப்பிட்ட பிரிவுகள் மற்றும் குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு மையத்திற்கும் ₹5 லட்சம் (மாதாந்திர கொள்முதல்களில் 15%, அதிகபட்சமாக ஒவ்வொரு மாதமும் ₹15,000 வரை) ஊக்கத்தொகை கிடைக்கும். கூடுதலாக, குறிப்பிட்ட பிரிவுகள் மற்றும் பகுதிகளில் ஏற்படும் வருமான வரி மற்றும் உள்கட்டமைப்பு செலவுகளுக்கு ஒரு முறை ஊக்கத்தொகையாக ₹2 லட்சம் வழங்கப்படுகிறது.

# நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை மேம்படுத்த நான்கு புதிய முயற்சிகள்

பிரதமர் மோடியின் "சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்கான முயற்சிகள்

**சஹ்கார் உதய் குழு**

பிரதமர் திரு நரேந்திர மோடியின் திறமையான தலைமையின் கீழ், "சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்ற, நாட்டில் 1,514 நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை (யுசிபி) வலுப்படுத்த நான்கு முக்கிய முயற்சிகளை இந்திய அரசு அறிவித்துள்ளது. நாட்டில் கூட்டுறவுத்துறையை மேம்படுத்துவதற்கு கூட்டுறவு அமைச்சகம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒனறிய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஷிகாந்த் தாஸ் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை களை வலுப்படுத்த சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பல்வேறு சலுகைகளை நீட்டிப்பதன் மூலம் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் நோக்கம் கணிசமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**ரிசர்வ் வங்கி எடுத்த முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:**

**நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் இப்போது புதிய கிளைகளைத் திறக்கலாம்**

நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் இப்போது முந்தைய நிதியாண்டில் உள்ள கிளைகளின் எண்ணிக்கையில் 10% (அதிகபட்சம் ஐந்து கிளைகள்) வரை RBI யின் முன் அனுமதியின்றி தங்கள் அங்கீகரிக்கப்பட்ட செயல்பாட்டுப் பகுதியில் புதிய கிளைகளைத் திறக்கலாம். இந்த வசதியைப் பெறுவதற்கு, நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் தங்கள் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையைப் பெற வேண்டும் மற்றும் பொருளாதாரத்தில் வலிமையாகவும், நிர்வாகத்தில் மேம்பாட்டுடனும் விளங்கும் (FSWM) வழிகாட்டுதல்களுக்கு இணங்க வேண்டும். நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களுக்கும் இந்த அம்சத்தை நிர்வகிக்கும் ஒரு கட்டமைப்பையும் ரிசர்வ் வங்கி அறிவித்தது.




**வணிக வங்கிகளுக்கு இணையாக நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் ஒருமுறை தீர்வினையும் செய்யலாம்**

இப்போது கூட்டுறவு வங்கிகள், உறுப்பினர் பேரவையால்- அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மூலம், தொழில்நுட்ப தள்ளுபடிக்கான செயல்முறையை வழங்குவதோடு, கடன் பெற்று திரும்பச் செலுத்தாதவர்களுக்கு ஒருமுறை தீர்வும் செய்யலாம். இதன் மூலம் கூட்டுறவு வங்கிகள் மற்ற வணிக வங்கிகளுக்கு இணையாக இப்போது வந்துள்ளன.

**நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கு கொடுக்கப்பட்ட முன்னுரிமைத் துறை கடன் இலக்குகளுக்கான திருத்தப்பட்ட காலக்கெடு**

இந்திய ரிசர்வ் வங்கியானது 2023-24 நிதியாண்டின் (FY24) நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான முன்னுரிமைத் துறை கடன்கள் (PSL) இலக்குகளை மார்ச் 31, 2026 வரை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க முடிவு செய்துள்ளது. முன்னுரிமைத் துறை கடன்கள் இலக்குகளை அடைய மார்ச் 31, 2023 வரை காலக்கெடு 60% ஆனது மார்ச் 31, 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2022-23 நிதியாண்டின் போது முன்னுரிமைத் துறை கடன்களின் பற்றாக்குறையை நீக்கிய பிறகு, அதிகப்படியான டெபாசிட்கள் ஏதேனும் இருந்தால், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்குத் திருப்பியளிக்கப்படும்.

**ரிசர்வ் வங்கியில் இணைப்பு அலுவலரை நியமித்தல்**

ஊரகங்கங்களில் கிளைகளைக் கொண்ட வணிக வங்கிகளைப் போலல்லாமல், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புறங்களில் மட்டுமே வேலை செய்வதால் சிரமங்களை எதிர்கொள்கின்றன. கூட்டுறவுத் துறையின் நீண்டகால கோரிக்கையான நெருக்கமான ஒருங்கிணைப்பு மற்றும் கவனம் செலுத்தும் தொடர்புகளை நிறைவேற்ற, ரிசர்வ் வங்கி சமீபத்தில் ஒரு இணைப்பு அலுவலரை அறிவித்தது.

ரிசர்வ் வங்கியின் முயற்சிகளை மோடி வரவேற்றுள்ளார். நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை வலுப்படுத்த எடுக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கைகள் குறித்த திரு அமித் ஷாவின் ட்வீட்டிற்கு பதிலளித்த திரு மோடி, இது கூட்டுறவுத் துறைக்கு அற்புதமானது மற்றும் பலருக்கு அதிகாரம் அளிக்கும் என்று மறு ட்வீட் செய்துள்ளார். ◆◆◆

# வேளாண்மைத் துறையை மேம்படுத்த ஐந்து முக்கிய முடிவுகளை அரசு வெளியிட்டது

**சஹ்கார் உதய் குழு**

பிரதமர் திரு நரேந்திர மோடியின் வேளாண்மைத் துறைக்கான "சஹகர் சே சம்ரித்தி" கூட்டுறவு மூலம் வளர்ச்சி என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்க அரசாங்கம் ஐந்து முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. இந்தத் துறையின் தேவைகளை நிறைவேற்றும் செய்வதற்காக ரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவுடன் ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு அமித் ஷா அவர்கள் நடத்திய கூட்டத்தில் இந்த முடிவுகள் உறுதி செய்யப்பட்டன.

கூட்டுறவுத் துறையின் மிகக் அடிமட்டப் பகுதியான முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்கள் (பிஏசிஎஸ்) வேளாண்மை விளைச்சலை அதிகரிப்பதிலும் பிற தேவைகளைப் நிறைவு செய்வதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் வகையில் இந்த முடிவுகளை செயல்படுத்தும். பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, நவீன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை ட்ரோன்களைப் பயன்படுத்தி தெளிக்கலாம். பி.ஏ.சி.எஸ் ஐ ட்ரோன் தொழில்முனைவோராகப் பயன்படுத்தலாம். வழக்கமான வேளாண்மையில் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்த அதிக பணியாளர்கள் தேவை. ட்ரோன்களைப் பயன்படுத்துவதன் வழியே செயல்முறையை வேகமாகவும், குறைந்த உழைப்புச் செலவும் கொண்டு செய்யலாம். ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி உழவர்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கி, சாகுபடிச் செலவைக் குறைக்கலாம். கூடுதலாக, நில அளவை நோக்கங்களுக்காக ட்ரோன்கள் பயன்படுத்தப்படலாம்.

பிரதான் மந்திரி கிசான் சம்ரித்தி கேந்திரா (பிஎம்கேஎஸ்கே) என இன்னும் நிர்ணயிக்கப்பட வேண்டிய பிஏசிஎஸ், பிஎம்கேஎஸ்கேயின் வரம்பிற்குள் கொண்டு வரப்படும் மற்றொரு முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது. தற்போது, மத்திய ரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மேற்பார்வையின் கீழ், இந்தியா முழுவதும் 600 பிரதமமந்திரி உழவர் மேம்பாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த மையங்கள் உழவர்களுக்கு பல்வேறு வேளாண்மை உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு



## ஒரு பார்வையில் ஐந்து அரசாங்க முடிவுகள்

- நாடு முழுவதும் உள்ள ஒரு லட்சம் பி.ஏ.சி.எஸ் உர சில்லறை விற்பனையாளர்களாக செயல்படும்
- பி.ஏ.சி.எஸ், பிரதமமந்திரி உழவர் மேம்பாட்டு மையத்திட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்படும்
- பி.ஏ.சி.எஸ் கரிம உரங்களை சந்தைப்படுத்தவும் பணிக்கப்படும்
- உர நிறுவனங்கள் சிறு உயிர்-கரிம உற்பத்தியாளர்களுக்கு ஒரு ஒருங்கிணைப்பாளராகச் செயல்படும்
- பி.ஏ.சி.எஸ் ட்ரோன் தொழில்முனைவோராகப் பணியமர்த்தப்படலாம். இந்த ட்ரோன்கள் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை தெளிப்பதோடு, நில அளவை ஆய்வுகளையும் மேற்கொள்ளும்.

வழங்குகின்றன. இந்த மையங்களில் இருந்து உழவர்கள் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை ஊரகப்பகுதிகளில் மலிவான விலையில் வாங்கலாம். இந்த மையங்களில் பயிர் விவரங்கள், மண் பரிசோதனை வசதிகள் மற்றும் அரசின் பிற திட்டங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கும்.

உரத் துறையின் சந்தை மேம்பாட்டு உதவி (எம்.டி.ஏ) திட்டத்தின் கீழ்,உயிர்-கரிம வேளாண்பொருள் உற்பத்தியாளர்களின் இறுதி உற்பத்தியில் சந்தைப் படுத்துவதற்கு உர நிறுவனங்கள் ஒருங்கிணைப்பாளராக செயல்படும். பி.ஏ.சி.எஸ் உயிர்-கரிம உர விநியோகத்தில் பங்கேற்கிறது மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களாக சந்தைப்படுத்தல் சங்கிலியை உருவாக்கும். நாடு முழுவதும் சுமார் 1 லட்சம் பிஏசிஎஸ்கள் உள்ளன. வரைபடத்தின் அடிப்படையில், உர சில்லறை விற்பனையாளர்களாக செயல்படாத பி.ஏ.சி.எஸ் கண்டறியப்பட்டு, படிப்படியாக சில்லறை விற்பனையாளர்களாக செயல்பட ஊக்குவிக்கப்படும். கரிம உரங்கள், குறிப்பாக புளிக்கவைக்கப்பட்ட கரிம உரம் (FOM), திரவ புளிக்கவைக்கப்பட்ட கரிம உரம் (LFOM) மற்றும் பாஸ்பேட் செறிவூட்டப்பட்ட கரிம உரம் (PROM) ஆகியவற்றை சந்தைப்படுத்த பி.ஏ.சி.எஸ் பணிபுரியும்.

முன்மொழியப்பட்ட இந்த திட்டமானது பி.ஏ.சி.எஸ் அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் பயனடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, ஊரகங்களில் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துகிறது மற்றும் உரங்கள், பூச்சிக்கொல்லிகள், விதைகள் மற்றும் வேளாண்மை கருவிகளின் உள்ளூர் விற்பனைகளை எளிதாக அணுகுவதை வழங்குகிறது. மேலும், பயிர் விளைச்சலை அதிகரிக்கவும் இத்திட்டம் உதவும்.

◆◆◆



# என்.சி.டி.சி கூட்டுறவு துறை வளர்ச்சியை ஊக்குவிக்கிறது

சஹ்கார் உதய் குழு

பிரதமர் திரு நரேந்திர மோடி தனது "சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) என்ற தொலைநோக்குப்பார்வை மூலம் கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்புடைய மக்களின் வாழ்க்கையை நேர்மறையான முறையில் மாற்ற உறுதிபூண்டுள்ளார். ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், மோடியின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்கவும், கூட்டுறவுத் துறையை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் புதிய எழுச்சியை அளிக்கும்

- என்.சி.டி.சி புதிய சாதனை படைத்துள்ளது. 2014ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த ₹25 ஆயிரம் கோடியுடன் ஒப்பிடுகையில், பி.ஏ.சி.எஸ் முதல் மாநில தலைமை கூட்டுறவு கடன் சங்கம் வரையிலான கூட்டுறவுச் சங்கங்களுக்கான கடன்கள் கணிசமாக அதிகரித்து, மொத்தம் ₹2 லட்சம் கோடியை எட்டியுள்ளது.

வகையில், கூட்டுறவு அமைச்சகம் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் பல கொள்கை மாற்றங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் உள்ளன, இதன் காரணமாக கூட்டுறவு கடன் வழங்கும் என்.சி.டி.சி ஒரு புதிய சாதனையை படைத்துள்ளது.

மோடி அரசாங்கத்தின் கீழ், பி.ஏ.சி. எஸ் முதல் மாநில தலைமை கூட்டுறவு கடன் சங்கம் வரையிலான கூட்டுறவுகளுக்கு வழங்கப்படும் கடன்கள் கணிசமாக அதிகரித்து, 2014 க்கு முன்பு இருந்த ₹25 ஆயிரம் கோடியுடன் ஒப்பிடுகையில் மொத்தம் ₹2 லட்சம் கோடியை



“ஊரகங்களில் ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு தனிநபருக்கும் வளர்ச்சிக்கான அணுகல் பிரச்சனைகளை எதிர்கொள்ள கூட்டுறவுத்துறை அமைச்சகம் தொடர்ந்து பணியாற்றும். கூட்டுறவு அமைச்சகம் வலுப்படுத்தவும், வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவரவும், நவீனமயமாக்கவும், கணினிமயமாக்கவும் மற்றும் போட்டி மனப்பான்மையுள்ள கூட்டுறவுகளை ஏற்படுத்தவும் உருவாக்கப்பட்டது.

**திரு அமித் ஷா**

**ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்**”

எட்டியுள்ளது. இன்று கூட்டுறவு துறையின் ஒட்டுமொத்த நிதித் தேவையை நிறைவேற்றும் திறனுள்ள நிறுவனமாக தேசிய கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனம் உள்ளது.

என்.சி.டி.சி, வேளாண்மைத் துறையில் உள்ள பி.ஏ.சி.எஸ் மூலம் கடன்கள் மற்றும் மானியங்கள் வழியே உழவர்களுக்கு நிதி உதவி வழங்குகிறது. சிறு சேமிப்பு வங்கிகளாக இயங்கும் பல தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களின் நிதித் தேவைகளையும் இது நிறைவேற்றுகிறது. செயலற்ற கூட்டுறவு சங்கங்களும் இப்போது செயல்படத் தொடங்கியுள்ளன. தேசிய கூட்டுறவு மேம்பாட்டு நிறுவனமானது உழவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், பெண்கள், இளம் தொழில்முனைவோர் மற்றும் கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை, மீன்வளம் மற்றும் கோழிப்பண்ணை துறைகளில் உள்ளவர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இது அவர்களின் வாழ்க்கையை பெரிதும் மேம்படுத்தியுள்ளது.

### கூட்டுறவுத் துறையில் சீர்திருத்தங்கள் புதிய எழுச்சியை அளித்துள்ளன

## என்.சி.டி.சி கூட்டுறவுகளின் முதுகெலும்பு

- என்.சி.டி.சி ஒன்பது ஆண்டுகளில் இரண்டு லட்சம் கோடி கடன்களை வழங்குகிறது.
- வேளாண்மை விளைபொருட்களை அரசு கொள்முதல் செய்வதில் அதிக செலவு.
- கூட்டுறவுத் துறையின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய என்.சி.டி.சி செயல்பட்டு வருகிறது.

புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைச்சகம் கூட்டுறவுத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களின் விதிகள் மாற்றப்பட்டு மாநிலங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பி.ஏ.சி.எஸ் கணினிமயமாக்கல் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனைக் கொண்டு





வருகிறது. கூட்டுறவு சங்கங்களுக்கு என்.சி.டி.சி மூலம் தொடர்ந்து நிதி வழங்கப்பட்டுள்ளது.

**உழவர்களின் நலன் கருதி வேளாண்மை விளைபொருட்களை கொள்முதல் செய்ய வலியுறுத்தல்**

என்.சி.டி.சி மாநில அரசுகள், மாநில கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் (DCCBs), மத்திய மற்றும் மாநில கூட்டுறவு கூட்டமைப்புகள் மற்றும் பி.ஏ.சி.எஸ் நிலை வரை பல்வேறு வகையான கூட்டுறவுகளுக்கு கடன்களை வழங்குகிறது. 2022 ஆம் ஆண்டில், என்.சி.டி.சி பல்வேறு கூட்டுறவு சங்கங்களுக்கு மொத்தம் ₹41,000 கோடி கடனை வழங்கியது, அதில் ₹35,000 கோடி உழவர்களின் விளைபொருட்களை கொள்முதல் செய்ய செலவிடப்பட்டது. சத்தீஸ்கர், தெலுங்கானா, பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்களின் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்புகள் பெரும் தொகையை திரட்டி உழவர்களிடமிருந்து குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) உணவு தானியங்களை கொள்முதல் செய்தன. இதன் மூலம் உழவர்களுக்கும், ஊரகப் பொருளாதாரத்திற்கும் நேரடிப் பலன் கிடைத்தது.

உழவர்களைத் தவிர, என்.சி.டி. சிகறவை மாடுகளை வாங்குவது முதல் பால் உற்பத்தி, பதப்படுத்துதல் & சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக வருவாயை அதிகரிப்பதற்கான செயல்பாட்டு மூலதனத்தை இணைக்கும் ஒருங்கிணைந்த பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள் வரை பல்வேறு வகையான நடவடிக்கைகளுக்காக பால்வளத் துறைக்கு கடன்களை வழங்குகிறது. கூட்டுறவு சங்கங்கள் கால்நடை மேம்பாட்டு திட்டங்களுக்கு எளிதான மற்றும் சலுகை விலையில் கடன் பெறலாம். 2022 நிதியாண்டில், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்வதற்கும், எத்தனால் ஆலையை அமைப்பதற்கும் சுமார் ₹1,500 கோடி கடன் வழங்கப்பட்டது.

ஊரக மக்கள், ஏழைகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் சமூகத்தின் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்க தனது அரசாங்கம் செயல்படுகிறது என்று திரு மோடி மீண்டும் வலியுறுத்தினார். இந்த பிரிவுகளுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சகம் வழங்கும் பல்வேறு திட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கோழிப்பண்ணை, மீன்வளம்,






## பல்வேறு ஒன்றியத் திட்டங்கள் பலன்களைப் பெறுகின்றன

- 10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) உருவாக்கம் மற்றும் ஊக்குவிப்புத் திட்டம்
- மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) திட்டம்
- பிரதம மந்திரி மீனவர் வளமேம்பாட்டுத்(PMMSY) திட்டம்
- பிரதம மந்திரி நுண்ணிய உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் (PMFME)
- பிரதம மந்திரி உழவர் வளமேம்பாட்டு திட்டம் (PMKSY)
- உழவர்களின் சந்தைப்படுத்தல் அமைப்பு (AMI)
- தோட்டக்கலையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான பணி (MIDH)
- தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் பணி (NBHM)
- வேளாண்மை விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய பணி (NMAET)
- தேசிய கால்நடைப் பணி திட்டம் (NLM)
- தேசிய பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NSTFDC)

கால்நடை வளர்ப்பு, நெசவாளர்கள் மற்றும் பெண்களுக்கு எளிதாக கடன் வழங்கப்படும் கூட்டுறவுகள் உட்பட பின்தங்கிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு என்.சி.டி.சி கடன்களை முன்னுரிமை அடிப்படையில் வழங்குகிறது. சுகாதாரம், உணவகத் தொழில் மற்றும் கல்வியை உள்ளடக்கிய சேவைத் துறைக்கும் முன்னுரிமை அடிப்படையில் என்.சி.டி.சி மூலம் கடன் வழங்கப்படுகிறது.

இளைஞர்களை ஈர்க்க சிறப்பு திட்டங்கள்

இளைஞர்களை கூட்டுறவு துறைக்கு இழுக்க இளைஞர் கூட்டுறவுகளை உருவாக்க அமைச்சகம் ஊக்குவித்து வருகிறது. இளம் கூட்டுறவு தொழில்முனைவோருக்கு சிறப்பு சலுகைகளின் கீழ் சாதாரண வட்டி விகிதத்தை விட 2% குறைவாக கடன்கள் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற இளைஞர் கூட்டுறவுகளை முன்னெடுத்துச் செல்ல சுமார் 12 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



### என்.சி.டி.சி இன் புத்துணர்ச்சி

திரு ஷா புதிய அமைச்சகத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், என்.சி.டி.சி இல் 51 உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழு மறுசீரமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவு துறைக்கான அமைச்சர் தலைவராகவும், மத்திய கூட்டுறவு செயலாளர் துணைத் தலைவராகவும் செயல்படுகிறார். அதேபோன்று, கூட்டுறவு அமைச்சகத்தின் செயலாளர் தலைமையில் 12 பேர் கொண்ட நிர்வாக சபைக்கு விரைவான முடிவுகளை எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் அதன் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன் உறுப்பினர்களில் ஒன்பது பேர் அதன்

பொதுக்குழுவின் பிரதிநிதிகள் மற்றும் ஒரு உறுப்பினர் என்.சி.டி.சி இன் நிர்வாக இயக்குநராக உள்ளார்.

என்.சி.டி.சி இன் தலைமையகம் டெல்லியில் உள்ளது, மீதமுள்ள 18 மண்டல அலுவலகங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. இதில், பெங்களூர், போபால், புவனேஸ்வர், சண்டிகர், சென்னை, டேராடூன், காந்திநகர், கவுகாத்தி, ஹைதராபாத், ஜெய்ப்பூர், கொல்கத்தா, லக்னோ, பாட்னா, புனே, ராய்ப்பூர், ராஞ்சி, சிம்லா மற்றும் திருவனந்தபுரம் ஆகியவை முக்கியமானவை. இந்த மண்டல அலுவலகங்களில் இருந்து வணிக நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. மண்டல அலுவலகங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் ₹1 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி பெறலாம். இந்தத் தொகையைத் தாண்டிய திட்டங்கள் என்.சி.டி.சி தலைமையகத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. என்.சி.டி.சி நடவடிக்கைகளில் பி.ஏ.சி.எஸ் முதல் மாநிலத் தலைமை கூட்டுறவு சங்கம் வரையிலான கூட்டுறவுத்துறை உறுப்பினர்களுக்கான பல்வேறு பயிற்சிகளும் அடங்கும். குருகிராமில் உள்ள லட்சுமணராவ் இனாம்தார் தேசிய கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அகாடமி (LINAC) இந்தப் பகுதியில் முதன்மையானது.

### என்.சி.டி.சி ஒரு லட்சிய இலக்கைக் கொண்டுள்ளது

அடுத்த மூன்று ஆண்டுகளில் என்.சி.டி.சி கடன் வழங்குவதற்கான இலக்கை திரு அமித் ஷா ₹3,25,000 கோடியாக உயர்த்தியுள்ளார். 2022 ஆம் ஆண்டில், என்.சி.டி.சி மொத்தக் கடனாக ₹41,000 கோடியை வழங்கியிருந்தாலும், நடப்பு 2023ஆம் நிதியாண்டில் ₹1,00,000 கோடி இலக்கை நிர்ணயித்துள்ளது. இருப்பினும், என்.சி.டி.சி இன் வருமானமில்லாத வாராக்கடன் சொத்துக்கள் (NPA) பூஜ்ஜியமாக உள்ளது.

என்.சி.டி.சி மாநில ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது

கூட்டுறவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் என்.சி.டி.சி இன் பங்கு முக்கியமானது. கூட்டுறவுகள் வலுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும் மாநிலங்களில், கூட்டுறவு நிறுவனங்கள் என்.சி.டி.சி நிதியுதவியுடன் புதிய பகுதிகளில் முயற்சி செய்கின்றன. கேரளா போன்ற மாநிலத்தில் சுகாதாரம், சுற்றுலா மற்றும் பிற துறைகளில் கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. உத்தரகாண்ட் கால்நடை மற்றும் பால் பண்ணை திட்டத்தால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பயனடைகின்றனர். மேகாலயா பன்றி வளர்ப்பு பணிகள் அமைப்பு மாநிலத்தில் 62,000 உறுப்பினர்களுக்கு உதவியுள்ளது. இதேபோல், தெலுங்கானாவின் செம்மறி ஆடு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் என்.சி.டி.சி ₹4,000 கோடி நிதியுதவி அளித்துள்ளது, இதன் மூலம் நான்கு லட்சத்துக்கும் அதிகமான

## பலன்களைப் பெறும் கூட்டுறவு சங்கங்கள்

அரசு பல்வேறு அமைச்சகங்களின் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை கூட்டுறவுகள் மூலம் செயல்படுத்தி வருகிறது. தேசிய அளவில் கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டங்களைத் திட்டமிடுதல், ஊக்குவித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் நிதியளித்தல் ஆகிய முக்கியப் பொறுப்புகள் என்.சி.டி.சி இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஊரக பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உழவர்கள், இளைஞர்கள், ஏழைகள் மற்றும் சமூகத்தின் பிற நலிந்த பிரிவினரின் கூட்டுறவு நிறுவனங்களுக்கு பல்வேறு அரசாங்க திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது. என்.சி.டி.சி ஆனது உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPO) உருவாக்குதல், நிலமில்லாமல் மொட்டை மாடிகளில் மற்றும் சாகுபடி செய்யாத நிலங்களில் தோட்டக்கலையை மேம்படுத்துதல், உழவர்களுக்கு மானிய விலையில் நவீன கருவிகள் கிடைப்பது மற்றும் மீன்பிடி, தேனீ வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற திட்டங்களுக்கு நிதி வழங்குகிறது. . இந்த திட்டங்களில் பெரும்பாலானவற்றிற்கு அரசாங்கம் பெரும் மானியங்களை வழங்குகிறது. பட்டு, சணல், தென்னை நார், கைத்தறி மற்றும் மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கும் என்.சி.டி.சி நிதி உதவி அளித்து வருகிறது. இளைஞர் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமின்றி, அனைத்து சங்கங்களும் புதிய முயற்சிகளை தொடங்க பல்வேறு சலுகைகளை பெற்று வருகின்றன.

## கூட்டுறவுத்துறை அமைச்சகம் உருவாக்கப்பட்ட பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை வலுப்படுத்த என்.சி.டி.சி ₹1,000 கோடி மானியம்.
- ₹1,000 கோடி மானியத்துடன், என்.சி.டி.சி ₹10,000 கோடி வரை கடன்களை வழங்க முடியும்.
- பால் மற்றும் மீன்வளத் துறையில் இரண்டு லட்சம் புதிய தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களை அமைக்க திட்ட மேலாண்மை அலகு (PMU) நிறுவுதல்.
- உலகின் மிகப்பெரிய உணவு தானிய சேமிப்பு திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை என்.சி.டி.சி பெறுகிறது.
- தேசிய கூட்டுறவு தரவுத்தளத்தை உருவாக்குவதில் என்.சி.டி.சி இன் 18 மண்டல அலுவலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- என்.சி.டி.சி தேசிய நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்களில் (NAFCUB) ₹200 கோடி பங்குகளை செலுத்த உள்ளது.




கால்நடைகள் மேய்க்கும் உறுப்பினர்கள் பயனடைகின்றனர். கர்நாடக மாநிலம் 'அம்ருத் ஸ்வாபிமானி சர்வாஹா யோஜனா' திட்டத்தின் கீழ், என்.சி.டி.சி ₹200 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது, இதன் காரணமாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் மேய்க்கும் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கைத்தறி நெசவாளர்களுக்கு ஜவுளி அமைச்சகத்தின் கீழ் பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அசாமின் கூட்டுறவு சணல் ஆலைகளுக்கு சிறப்பு உதவி வழங்கப்படுகிறது.

கூட்டுறவு அமைச்சகம் உழவர்கள் உற்பத்தியாளர்கள் அமைப்பை (FPO) உருவாக்கும் பொறுப்பையும் என்.சி.டி.சி இடம்ஒப்படைத்துள்ளது. மீன்வளத்துறையில், 1,000 மீன்வள உற்த்தியாளர்கள் அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.இதற்கு, மீன்வளத்துறை ₹225 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. கடலோர மகாராஷ்டிராவில் 14 மற்றும் குஜராத்தில் 10 ஆழ்கடல் மீன்பிடி இழுவை படகுகள் வாங்க நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ◆◆◆

## என்.சி.டி.சி இன் விரிவாக்கப்பணிகள்

- என்.சி.டி.சி இன் செயல்பாட்டை மேம்படுத்த பட்டய கணக்காளர்கள் மற்றும் திறமையான மேலாளர்கள் (MBA) நியமனம்.
- தொழில்நுட்பத் தகுதிகள் கொண்ட மூத்த ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்களை ஒப்பந்தம் செய்தல்.
- தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் விற்பனைக்குழு உருவாக்கம் செய்தல்.
- புதிய வணிகப் பகுதிகளைக் கண்டறிந்து தொழில் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
- கூட்டுறவுத் துறையை விரிவாக்குவதன் மூலம் என்.சி.டி.சி இன் வரம்பை அதிகரிக்கச் செய்தல்.
- மூன்று தேசிய அளவிலான பல மாநில கூட்டுறவு சங்கங்களை பங்குதாரர்களாக இணைத்தல்.

# கணினி மயமாக்கல் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான பிரதமரின் உந்துதல்

சஹ்கார் உதய் குழு

- கணினி மயமாக்கல் இந்தியாவில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வந்தது.
- நிலையான மேம்படுத்தும் இலக்குகளை பின்தள்ளிவிடாமல் இருப்பது மக்களின் கூட்டுப் பொறுப்பாகும்.

இந்திய திருநாட்டின் தலைமையில் வாரணாசியில் நடைபெற்ற ஜி20 மேம்பாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில், இந்தியாவில் கணினி மயமாக்கல் மாற்றத்தின் தாக்கத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி எடுத்துரைத்தார்.

அவர் தனது உரையில், வெற்றிகரமான கொள்கை உருவாக்கம், பயனுள்ள வள ஒதுக்கீடு மற்றும் மேம்பட்ட பொது சேவை வழங்கல் ஆகியவற்றிற்கு உயர்தர தரவுகளின் அவசியத்தை வலியுறுத்தினார். தரவு இடைவெளியைக் குறைக்க தொழில்நுட்பத்தை மக்களிடம் பரவலாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டிய அவர், இந்தியா தனது அனுபவங்களை கூட்டாளி நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் கூறினார்.

ஜி20யின் வளர்ச்சிக்கான மாநாட்டின் நிகழ்ச்சி நிரல்படி வாரணாசிக்கு சென்றது குறித்து அவர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். திரு மோடி தனது உரையின் போது, நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) கவனிக்கப்படாமல் இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதில் உள்ள கூட்டுப் பொறுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சில நாடுகளில் உணவு, எரிபொருள் மற்றும் உர நெருக்கடிகளுக்கு வழிவகுத்த கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் தற்போதைய புவிசார் அரசியல் பதட்டங்களால் ஏற்படும் பிரச்சனைகளை அவர் எடுத்துரைத்தார்.

நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு விரிவான, உள்ளடக்கிய, நியாயமான மற்றும் நிலையான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார். இந்த நோக்கங்களை அடைய முதலீட்டை அதிகரிக்கவும், பல நாடுகள் எதிர்கொள்ளும் கடன் அபாயங்களுக்கான பதில்களைக் கண்டறியவும் அவர் வலியுறுத்தினார். தகுதித் தேவைகளை விரிவுபடுத்துவதற்கும், அது தேவைப்படுபவர்களுக்கு நிதி உதவி கிடைப்பதை உறுதி செய்வதற்கும் பலதரப்பு நிதி நிறுவனங்களைச் சீர்திருத்தம் செய்ய திரு மோடி முன்மொழிந்தார்.



வளர்ச்சியடைதற்குஉலகின் தலையாய பிரச்சினை.

**திரு நரேந்திர மோடி**
**பிரதமர்**

திரு மோடி தனது உரையின் போது, 100க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள மாவட்டங்களில் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் முயற்சிகளை எடுத்துரைத்தார். இந்த பகுதிகள் தேசிய வளர்ச்சியை உந்துதலில் முக்கிய பங்காற்றியுள்ளன. இந்த வெற்றிகரமான வளர்ச்சி மாதிரியை ஆராய்ந்து, நிகழ்ச்சி நிரல் 2030 இல் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்குப் பயன்படுத்துமாறு அவர் ஜி20 மேம்பாட்டு அமைச்சர்களை வலியுறுத்தினார்.

கொள்கைகளை உருவாக்குவதற்கும் பொது சேவைகளை வழங்குவதற்கும் துல்லியமான மற்றும் நம்பகமான தரவுகளை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை பிரதமர் வலியுறுத்தினார். "தரவுப் பிரிப்பு" என்ற கருத்தையும் அவர் குறிப்பிட்டார், இது அவர்களின் வளங்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் அடிப்படையில் தரவு அணுகலைக் கொண்ட நாடுகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டைக் குறிக்கிறது.

இந்தியாவின் கணினி மயமாக்கல் முயற்சிகளைப் பற்றி அவர் உயர்வாகப் பேசினார், மக்களை மேம்படுத்துவதிலும், உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதிலும் அவற்றின் புரட்சிகரமான தாக்கத்தை வலியுறுத்தினார். கூடுதலாக, அவர் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இந்தியாவின் விருப்பத்தை வெளிப்படுத்தினார் மற்றும் வளரும் நாடுகளில் சொற்பொழிவு, மேம்பாடு மற்றும் விநியோகத்திற்கான தரவைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதில் உறுதியான நடவடிக்கைகளை ஊக்குவித்தார்.

இயற்கையை மதிக்கும் பண்டைய இந்திய தத்துவத்தில் வேரூன்றிய இந்தியாவின் நிலம் சார்ந்த கலாச்சாரத்தை எடுத்துரைத்து, சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும் பிரதமர் மோடி உரையாற்றினார். காலநிலை நடவடிக்கைக்கு பங்களிக்கும் வகையில் ஐ.நா பொதுச்செயலாளருடன் இணைந்து உயர்மட்டக் கொள்கைகளின் தொகுப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட வாழ்க்கைப்பணியின் தொடக்கத்தை அவர் வலியுறுத்தினார்.

நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் பெண்களின் அதிகாரம் மற்றும் பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித்த திரு மோடி, அதிகாரமளிப்பதைத் தாண்டி பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை மேம்படுத்துவதே இந்தியாவின் குறிக்கோள் என்று கூறினார்.

◆◆◆



ஒற்றை உலகு, ஒரே குடும்பம், ஒரு எதிர்காலம் என்ற கோட்பாட்டின்படி உலகின் வலிகளைக் களைவதற்கும் ஒரே குடும்பமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் நல்லோர் எதிர்காலத்திற்காக நம்பிக்கைகொள்வதுமாக இந்தியாவின் தலைமையில் நடைபெறும் ஜி20 மாநாடு வேளாண்மையில் முன்னுரிமை தரவேணம்டும்.

**திரு நரேந்திர மோடி**
**பிரதமர்**

# உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறு பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்

**சஹ்கார் உதய் குழு**

உலகளவில் வேளாண்மைத் துறை எதிர்கொள்ளும் பல பிரச்சனைகளை வலியுறுத்திய பிரதமர் திரு நரேந்திர மோடி, உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கூட்டு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க ஜி20 வேளாண்மை துறை அமைச்சர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். "ஒற்றை உலகு, ஒரே குடும்பம் மற்றும் ஒரு எதிர்காலம்" என்ற உணர்வை வெளிப்படுத்திய அவர், ஜி20 நாடுகளின் வேளாண்மை அமைச்சர்களை உலகளாவிய உணவுப் பாதுகாப்பை அடைவதற்கு கூட்டு நடவடிக்கையை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து விவாதிக்குமாறு வலியுறுத்தினார்.

தெற்குலக நாடுகள் எதிர்கொள்ளும் சிரமங்களை, குறிப்பாக தொற்றுநோய் மற்றும் விநியோகச் சங்கிலியில் இடையூறுகளை ஏற்படுத்தும் அதிகரித்த புவிசார் அரசியல் பதட்டங்களின் விளைவுகள் ஆகியவற்றை திரு மோடி எடுத்துரைத்தார். "சிறு உழவர்களை மையமாகக் கொண்ட நிலையான மற்றும் உள்ளடக்கிய உணவு முறைகளை உருவாக்குவதற்கான வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும். உலகளாவிய உர விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதற்கான வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும், "என்று அவர் கூறினார்.

நவீன வேளாண்மை முறைகள் குறித்து பங்கேற்ற நாடுகளுக்கு விழிப்புணர்வு அளித்த பிரதமர், சிறந்த மண் நலம் , பயிர் நலம் மற்றும் விளைச்சல் தொடர்பான வேளாண்மை முறைகளையும் பின்பற்ற வேண்டும் என்றார்.

### கணினி தொழில்நுட்பத்தால் உழவர்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளனர்

புதுமை மற்றும் கணினி தொழில்நுட்பம் மூலம் உழவர்களை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தின் அவசியத்தை திரு மோடி வலியுறுத்தினார். தெற்குலகத்தில் (தெற்கு அரைக்கோளத்தில் உள்ள வளரும் நாடுகள்) சிறு மற்றும் குறு உழவர்களுக்கு மலிவு விலையில் தீர்வுகளை உருவாக்குவது குறித்தும் அவர் பேசினார். இந்த சந்திப்பின் போது, வேளாண்மை மற்றும் உணவுத்துறைகளில் ஏற்படும் கழிவுகளைக் குறைப்பதன் முக்கியத்துவத்தையும், கழிவுகளில் இருந்து செல்வத்தை உருவாக்கும் முறைகளில் முதலீடு செய்வதையும் பிரதமர் வலியுறுத்தினார். 'அடிப்படைக்கு திரும்புதல்' மற்றும் 'எதிர்காலத்தை முன்னோக்கி' ஆகிய கொள்கைகளை ஒன்றிணைக்கும் கொள்கையை இந்தியா செயல்படுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

### இந்திய உழவர்கள் இயற்கை வேளாண்மையை பின்பற்றுகிறார்கள்

நிலையான வளர்ச்சிக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதிபலித்த திரு மோடி, "இந்தியா முழுவதும் உள்ள உழவர்கள் இப்போது இயற்கை வேளாண்மை முறைகளை பின்பற்றுகிறார்கள். அவர்கள் செயற்கை உரங்களையோ பூச்சிக்கொல்லிகளையோ பயன்படுத்துவதில்லை. 'ஒரு துளிக்கு, அதிக பயிர் உற்பத்தி' செய்வதிலும், கரிம உரங்கள் மற்றும் பூச்சி மேலாண்மை தீர்வுகளை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்தி தாய் நிலத்திற்குப் புத்துயிர் ஊட்டும் நிகழ்வுகளில் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றனர்.

இந்தியாவில் உள்ள உழவர்கள் உற்பத்தியை அதிகரிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர் என்றார். அவர் தங்கள் பண்ணைகளில் சூரிய சக்தியை உற்பத்தி செய்து பயன்படுத்துதல், பயிர்த் தேர்வை மேம்படுத்த மண் நலன் அட்டைகளைப் பயன்படுத்துதல் மற்றும் ஊட்டச்சத்துக்களை தெளிப்பதற்கும், பயிர்களைக் கண்காணிக்கவும் ட்ரோன்களைப் பயன்படுத்துவதையும் அவர் எடுத்துகாட்டாக சொன்னார். வேளாண்மையில் உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த 'இணைவு அணுகுமுறை' சிறந்த வழி என்று திரு மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

தினைப் பயன்பாட்டை உயர்த்த ஸ்ரீ அன்ன திட்டத்தை ஊக்குவிக்க வேண்டுகோள்

வேளாண்மைத் துறையில் இந்தியாவின் அறிவு மற்றும் அனுபவத்தை உலகத் தலைவர்களுக்கு எடுத்துரைத்த திரு மோடி, 2023 ஆம் ஆண்டு 'சர்வதேச தினை ஆண்டாக' கொண்டாடப்படுகிறது என்று குறிப்பிட்டார். இந்த மிகச்சிறந்த உணப்பொருள் சாப்பிடுவதற்கு ஆரோக்கியமானவை என்றும், பயிருக்கு குறைந்த தண்ணீர் மற்றும் உரம் தேவைப்படுவதால் உழவர்களின் வருமானத்தை உயர்த்த உதவுவதாகவும் அவர் கூறினார்.

◆◆◆




# புதிய கூட்டுறவு கொள்கை

## கூட்டுறவு இயக்கத்தை விரைவுபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது

### புதிய கூட்டுறவுக் கொள்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது

சஹ்கார் உதய் குழு

- தேசிய அளவிலான குழுவின் தலைவர் சுரேஷ் பிரபு, புதிய கூட்டுறவுக் கொள்கை வரைவு குறித்து ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் அமித் ஷாவிடம் விளக்கம் அளித்தார்.
- மாநில அரசுகள், மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகள், தேசிய கூட்டுறவு சங்கங்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களுடனான ஆலோசனைகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன.
- இந்தியாவில் சுமார் 29 கோடி உறுப்பினர்களுடன் சுமார் 8.5 லட்சம் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, புதிய தேசிய கூட்டுறவுக் கொள்கையை அறிமுகப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது சம்பந்தமாக, கொள்கை வரைவைத் தயாரிப்பதற்காக 47 பேர் கொண்ட தேசிய அளவிலான குழு செப்டம்பர் 2, 2022 அன்று நிறுவப்பட்டது, அது இப்போது அதன் இறுதி கட்டத்தில் உள்ளது. குழுவின் தலைவர் சுரேஷ் பிரபு மற்றும் பிற உறுப்பினர்கள் சமீபத்தில் ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷாவிடம் வரைவு மற்றும் விரிவான விளக்கக்காட்சியை வழங்கினர்.

கூட்டத்தின் போது, திரு பிரபு மற்றும் பிற குழு உறுப்பினர்கள் ஒன்றிய உள்துறை அமைச்சரிடம் வரைவு கொள்கையின் நோக்கங்கள், தொலைநோக்குப்பார்வை மற்றும் பணி குறித்து தெரிவித்தனர். கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் நிர்வாகம், கூட்டுறவுகள் துடிப்பான பொருளாதார நிறுவனங்களாக, கூட்டுறவுகளுக்கான சம நிலை, மூலதனம் மற்றும் நிதி ஆதாரங்கள், முன்னுரிமைப் பிரிவுகளைச் சேர்ப்பது, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், மேம்பாடு மற்றும் பயிற்சி, நிலைத்தன்மை மற்றும் பல்வேறு துறைகளில் செயல்படுத்தும் முறைகளுக்கான முக்கிய பரிந்துரைகள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

கூட்டத்தில் இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் திரு திலீப் சங்கானி உட்பட மற்ற குழு




உறுப்பினர்களான திரு கே.வி.ஷாஜி, நபார்டு தலைவர்; திரு ஜோதிந்திர மேத்தா, NAFCUB இன் தலைவர்; திரு பிகே அகர்வால், கூட்டுறவுத் துறையின் நிதி ஆலோசகர், அரசு. உத்தரபிரதேசத்தின்; முனைவர் உமாகாந்த் தாஷ், ஊரக மேலாண்மை நிறுவனம்,ஆனந்த் (IRMA); திரு சதீஷ் மராத்தே, ரிசர்வ் வங்கியின் இயக்குனர்; முனைவர் சி பிச்சை, காந்திகிராம் ஊரக பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மற்றும் முனைவர் ஹேமா யாதவ், VAMNICOM இயக்குனர் ஆகியோர் கலந்து கொண்டனர்;

கூட்டுறவு அமைச்சகத்தின் செயலாளர் (கூட்டுறவு), கூடுதல் செயலாளர் (கூட்டுறவு) மற்றும் மூத்த அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

சந்திப்பின் போது, திரு மோடியின் 'சஹகர் சே சம்ரித்தி ('கூட்டுறவால் வளர்ச்சி) பற்றிய தொலைநோக்குப் பார்வையை எவ்வாறு நனவாக்குவது மற்றும் அடிமட்ட அளவில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவது குறித்து குழுவிற்கு திரு ஷா வழிகாட்டினார். மாநில அரசுகள், மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகள், தேசிய கூட்டுறவு போன்றவை உட்பட அனைத்து பங்குதாரர்களின் ஆலோசனைக்குப் பிறகு ஜூலை 2023 இல் புதிய ஒத்துழைப்புக் கொள்கை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2002 இல், ஒரு கூட்டுறவுக் கொள்கை உருவாக்கப்பட்டது, ஆனால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, ஒரு புதிய வரைவு தேவைப்பட்டது. இது ஏப்ரல் 12 மற்றும் 13, 2022 அன்று நடந்த மாநாட்டில் இந்த கருத்தை விவாதித்த பிறகு தொடங்கப்பட்டது. புதிய கொள்கை ஆவணத்திற்காக பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து 500 க்கும் மேற்பட்ட பரிந்துரைகள் பெறப்பட்டன. ஒரு தேசியக் குழு எட்டு கூட்டங்களுக்கு மேல் நடத்தியது மற்றும் வரைவை உருவாக்க பல்வேறு பங்குதாரர்களுடன் ஆலோசனை நடத்தியது.

◆◆◆


> "
> புதிய தேசிய கூட்டுறவுக் கொள்கையை உருவாக்குவது, "சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்க உதவும், கீழ்மட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தும்.
>
> **திரு அமித் ஷா**
>
> **ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்**
> "

**முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு சுரேஷ் பிரபு தலைமையிலான வரைவுக் குழுவில், இந்தியா முழுவதிலும் இருந்து 49 உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு பங்குதாரர் குழுக்கள் உள்ளனர். இந்தக் குழுக்களில் மாநில அரசுகளின் கூட்டுறவுத் துறைகள், அமைச்சகங்கள் மற்றும் மத்திய அரசின் துறைகள், IRMA மற்றும் RBI போன்ற நிறுவனங்கள், இஃப்கோ, NCCF, NAFCARD, NAFCUB, KRIBHCO, NFCSF, NCUI, NAFED போன்ற தேசிய கூட்டமைப்புகள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், பல்வேறு துறைகளின் வல்லுனர்கள் அத்துடன் கல்வியாளர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோர் அடங்குவர்.**



# எளிதாக தொழில் செய்வது கூட்டுறவு துறையை மேம்படுத்தும்: அமித் ஷா

சஹ்கார் உதய் குழு



■ புதிய கூட்டுறவு சங்கங்களின் பதிவு எளிதாகவும் செயல்பட வசதியாகவும் இருக்கும்.

■ மத்திய கூட்டுறவு பதிவாளர் அலுவலகத்தின் கணினிமயமாக்கலின் முன்னேற்றம் குறித்து கூட்டுறவு அமைச்சகம் திருப்தி தெரிவித்தது.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் "சஹகர்சேசம்ரித்தி"(கூட்டுறவுமூலம் வளர்ச்சி) என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையில், கூட்டுறவுத் துறையில் எளிதாக வணிகம் செய்வதை ஊக்குவிக்க கூட்டுறவு அமைச்சகம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த முன்முயற்சிகளின் கீழ், புதிய கூட்டுறவு சங்கங்களின் பதிவு உட்பட பல மாநில கூட்டுறவு சங்கங்களின் (MSCS) அனைத்து நடவடிக்கைகளையும் எளிதாக்கும் வகையில் கணினி சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க கூட்டுறவு சங்கங்களின் மத்திய பதிவாளர் (CRCS) அலுவலகம் கணினிமயமாக்கப்படுகிறது.

ஒரு மென்பொருள் மற்றும் தளம் உருவாக்கப்பட்டு வருகிறது, இது ஜூன் 26, 2023 க்குள் தொடங்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கணினிமயமாக்கலின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தார். சந்திப்பின் போது, CRCS அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள் மூலம் இளைஞர்கள் சிறந்த பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வுகள் உள்ள தளங்களில் ஈடுபட வேண்டும் என்று திரு ஷா அறிவுறுத்தினார்.

CRCS அலுவலகம் MSCS இன் மேலாண்மை, பதிவு, ஆண்டறிக்கை ஒழுங்குமுறைச் செயல்பாடுகளைக் கண்காணிக்கிறது. பல மாநில கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 2002ன் கீழ் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதை உறுதிசெய்வதற்கும் இது பொறுப்பாகும்.

கணினிமயமாக்கலின் முக்கிய நோக்கங்கள், முழுமையாக காகிதமில்லாத விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் சரிபார்த்தல், மென்பொருள் மூலம் MSCS சட்டம் மற்றும் விதிகளுக்குத் தானாக உட்பட்டு இணங்குதல், வணிகத்தை மேம்படுத்துதல், கணினி தொடர்பு, வெளிப்படையான சரிபார்ப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வு ஆகியவை அடங்கும்.

கணினி மயமாக்கல் வேலையை எளிதாக்கும்

உருவாக்கப்படும் மென்பொருள், CRCS அலுவலகத்தில் கணினி ஊடகம் மூலம் விண்ணப்பம் மற்றும் சேவை கோரிக்கைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் சரிபார்த்துச் செயல்படுத்த உதவும்.

ஒருமுறைக்கான கடவுஎண் அடிப்படையிலான பயனர் பதிவு, MSCS சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு இணங்குவதை உறுதி செய்வதற்கான சரிபார்ப்புச் சோதனைகள், விசாரணைகளை நடத்துவதற்கான காணோலி நேர்காணல் திறன்கள், பதிவுச் சான்றிதழ்களை மின்னணு முறையில் வழங்குதல் மற்றும் பிற தகவல்தொடர்புகள் உள்ளிட்ட பல முக்கிய செயல்பாடுகள் இதில் இடம்பெறும்.

மென்பொருளின் தொடக்கப் பதிப்பு தற்போதுள்ள MSCS சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வரவிருக்கும் இரண்டாவது பதிப்பு MSCS சட்டம் மற்றும் விதிகளுக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கியதாக இருக்கும். பயனர் கருத்து மூலம் தொடக்கப் பதிப்பில் கண்டறியப்பட்ட ஏதேனும் இடைவெளிகள் அல்லது குறைபாடுகளை நிறைவு செய்வதன் மூலம் இந்தப் புதுப்பிக்கப்பட்ட பதிப்பு முன்மொழியப்பட்ட மாற்றங்களை உள்ளடக்கி மேம்படுத்தப்படும்.

◆◆◆

# உணவு சேமிப்பு திட்டம் ஊரக இந்தியாவில் புரட்சியை ஏற்படுத்தும்: பி.எல்.வர்மா



■ இந்தத் திட்டம் நாட்டில் உள்ள சுமார் 14 கோடி வேளாண்மைக் குடும்பங்கள், குறிப்பாக சிறு மற்றும் குறு உழவர்களின் வாழ்வில் செழிப்பைக் கொண்டுவரும்.

**சஹ்கார் உதய் குழு**

பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், உழவர்களின் வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் பல தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தானியங்கள் வீணாவதைத் தடுக்கவும், அவற்றை சேமிப்பதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்யவும், உலகின் மிகப்பெரிய உணவு சேமிப்புத் திட்டத்தின் வடிவத்தில் அரசாங்கம் ஒரு தொலைநோக்குப்பார்வையில் முடிவை எடுத்துள்ளது, இது இந்தியாவின் உணவுப் பாதுகாப்பையும் அதிகரிக்கும்.

ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா, "சஹகர் சே சம்ரித்தி"(கூட்டுறவு மூலம் வளர்ச்சி) என்ற திரு மோடியின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க, முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்கள் (PACS) மூலம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். ஒன்றிய கூட்டுறவு இணையமைச்சர் திரு பி.எல். வர்மா, பண்முக உணவுச் சேமிப்புத் திட்டத்தின் தொலைநோக்குப் பலன்களை விவரித்து, உழவர்களுக்கு உள்ளூர் அளவில் பயிர்களை பாதுகாப்பாக சேமித்து வைக்கும் வசதியை இது வழங்கும் என்றார்.

நாட்டில் தானிய சேமிப்பில் உள்ள உள்கட்டமைப்பில் இடைவெளிகளைக் குறைப்பதன் மூலம் பி.ஏ.சி.எஸ் மேலும் பலப்படுத்தப்படும். ஊரக செழிப்பை மேம்படுத்தவும், தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களின் வணிக நடவடிக்கைகளை அதிகரிக்கவும், பி.ஏ.சி.எஸ் அளவில் கிடங்குகள் கட்டப்படும்.

### தானிய சேமிப்பு திட்டம் பின்வரும் நன்மைகளை வழங்கும்

இது மாநில முகவர்கள் மற்றும் இந்திய உணவுக் கழகம் (FCI) ஆகியவற்றிற்கான கொள்முதல் மையங்களாக, நியாய விலைக் கடைகளாக (FPS), தனிப்பட்ட உழவுக்கருவிகள் வாடகை மையங்களாக மற்றும் வேளாண் விளைபொருட்களை மதிப்பிடல், பிரித்தல், வகைப்படுத்துதல் ஆகிய தரம்பிரிக்கும் அலகுகளாக அமைத்தல் உள்ளிட்ட பொதுவான செயலாக்க அலகுகளை அமைத்து செயல்படும்.

உள்ளூர் அளவில் பரவலாக்கப்பட்ட சேமிப்புத் திறனை உருவாக்குவது உணவு தானிய விரயத்தைக் குறைத்து இந்தியாவின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தும்.

உழவர்கள் தங்கள் விளைபொருட்களைப் பாதுகாக்கும் சேமிப்பு வசதியைப் பெறுவார்கள், இது பயிர்களின் லாபமற்ற விற்பனையைத் தடுக்கும், இதனால் அவர்கள் விளைபொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்கும். இது ஊரகங்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும், அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும்.

இது உணவு தானியங்களை கொள்முதல் மையங்களுக்கு கொண்டு செல்வதற்கும், சரக்குகளை கிடங்குகளில் இருந்து நியாய விலைக் கடைகளுக்கு கொண்டு செல்வதற்கும் ஏற்படும் செலவை பெருமளவு குறைக்கும். 'முழு-அரசாங்க' அணுகுமுறையால் இந்தத் திட்டம் தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்களை பலப்படுத்துவதன் மூலம் அவர்களின் வணிக நடவடிக்கைகளை பல்வகைப்படுத்த உதவுகிறது, இதனால் உழவர்களின் வருமானம் அதிகரிக்கும். பி.ஏ.சி. எஸ் ஒரு துடிப்பான பல்நோக்கு வணிக நிறுவனமாக செயல்பட முடியும். "ஆத்மநிர்பர் பாரத்-விக்சித் பாரத்" என்ற உயர்வுள்ளலை நிறைவேற்றுவதில் மத்திய அரசும் வேகம் பெறும்.

இத்திட்டத்தின் பல்வேறு மண்டலத் தேவைகள் தொடர்பான முக்கியத் தகவல்களை வழங்கவும், அது சரியான நேரத்தில், நாடு முழுவதும் சீராக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய, பல்வேறு மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் (UTs) ஒரு முன்னோடித் திட்டத்தை கூட்டுறவு அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது.

வேளாண்மை மற்றும் உழவர்கள் நல அமைச்சகம், உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் ஆகியவற்றால் அடையாளம் காணப்பட்ட திட்டங்களின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்துவதால் இந்தியாவின் உணவு தானிய சேமிப்புத் துறையில் பெரும் புரட்சியைக் கொண்டுவரும். கடைநிலப்படியில் உள்ள மக்களின் சமூகப்பொருளாதார வளர்ச்சியை எதிர்நோக்கும் நேர்மறையான விளைவுகளை எட்டக்கூடிய ஓர் புதிய வரைவினை இத்திட்டம் ஊரக மேம்பாட்டிற்காக ஏற்படுத்தும். இந்நாட்டில் உள்ள 14 கோடி உழவர்களின் குடும்பங்களில் குறிப்பாக சிறு, குறு உழவர்களின் வாழ்வில் செழிப்பை ஏற்படுத்தும்.

◆◆◆




# இஃப்கோ, தூய்மை மற்றும் பசுமை இந்தியா என்ற பிரதமரின் பார்வைக்கு உறுதியளித்துள்ளது

**சஹ்கார் உதய் குழு**

- சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக ஒரு கோடி வேப்ப மரக்கன்றுகள் நடப்பட்டது
- 52வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில், திலீப் சங்கானி இஃப்கோவின் சாதனைகளைப் பாராட்டினார்.
- உறுப்பினர்களுக்கு 20% அதிக ஈவுத்தொகை அறிவிப்பு.

மண் மற்றும் நிலத்தடி நீர் நலனை பராமரிக்க உரங்களின் கண்மூடித்தனமான பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் இஃப்கோ குறிப்பிடத்தக்க பணியைச் செய்துள்ளது. வேளாண்மைத் துறையில் ஒரு மைல்கல்லை அமைத்து, இஃப்கோ உள்நாட்டு நானோ யூரியா மற்றும் நானோ டிஏபி ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது, இது உலகத்தை வியக்க வைத்தது. இது உழவர்களுக்கு வேளாண் செலவைக் குறைக்க உதவும் அதே வேளையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் பெரிய ஊக்கத்தைப் பெற்றுள்ளது. இஃப்கோ, பிரதமர் திரு நரேந்திர மோடியின் பசுமை இந்தியா திட்டத்தை நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளது மற்றும் பசுமையான சூழலை மேம்படுத்துவதற்கும், சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிப்பதற்கும் இதுவரை ஒரு லட்சம் வேப்ப மரக்கன்றுகளை இஃப்கோ நட்டுள்ளது.

பல்வேறு நானோ உரங்களின் வளர்ச்சி, தன்னம்பிக்கை அடையவும், உரங்களின் மீதான இறக்குமதி சார்ந்திருப்பதைக் குறைப்பதன் மூலம் செலவழிக்கப்படும் அந்நியச் செலாவணியைச் சேமிக்கவும் உதவும். இஃப்கோ தலைவர் திலீப் சங்கானி, அதன் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் (AGM) சாதனைகளை பட்டியலிடுகையில், இஃப்கோ அதன் உறுப்பினர்கள் மற்றும் நாடு, சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்டுள்ளதாக கூறினார்.

இஃப்கோவின் செயல்திறனைப் பாராட்டிய அவர், இந்த ஆண்டு




அதன் உறுப்பினர்களுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு 20% ஈவுத்தொகையை வழங்க முடிந்தது என்றும் கூறினார். இஃப்கோ நிர்வாக இயக்குனர் முனைவர் உதய் ஷங்கர் அவஸ்தி தலைமையிலான குழு அடுத்த 25 ஆண்டுகளுக்கு அதே ஈவுத்தொகையை உறுதி செய்ய திட்டமிட்டுள்ளது.

**இஃப்கோ உலகளாவிய தளத்தில் தனது அடையாளத்தை வலுப்படுத்தியுள்ளது.**

“உலக கூட்டுறவு கண்காணிப்பு அறிக்கையின்” 2022 பதிப்பில், சர்வதேச கூட்டுறவு அமைப்பு (ICA) விற்றுமுதல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை தனிநபருக்கான (GDP per capita) விகிதத்தின் அடிப்படையில் உலகின் சிறந்த கூட்டுறவு நிறுவனமாக இஃப்கோவை மதிப்பிட்டுள்ளது. கூட்டுறவுகளை கண்காணிப்பது சர்வதேச கூட்டுறவு அமைப்பின் பொறுப்பாக உள்ளது.

திரு சங்கானியின் கூற்றுப்படி, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இஃப்கோ 128.07 லட்சம் டன் உரப் பொருட்களை விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இதில் 76.83 லட்சம் டன் யூரியாவும், 32.80 லட்சம் டன் டி.ஏ.பி. கூடுதலாக, அவர்கள் 326.56 லட்சம் நானோ

> **‘தூய்மையான மற்றும் பசுமையான இந்தியா’ என்ற பிரதமரின் பார்வையை நிறைவேற்ற இஃப்கோ உறுதிபூண்டுள்ளது.**
>
> **திலீப் சங்கானி**
>
> **தலைவர், இஃப்கோ**

யூரியா (திரவ) குப்பிகளை விற்று சாதனை படைத்துள்ளனர்.

இஃப்கோவிர்க்கு முந்தைய அதிகபட்ச லாபமான ₹4,107 கோடியையும், இந்த ஆண்டில் அதிகபட்ச விற்பனை விற்றுமுதல் ₹60,324.00 கோடியையும் எட்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் ஜார்கண்டில் உள்ள தியோகர் நகரில் நடைபெற்ற நானோ யூரியா ஆலையின் அடிக்கல் நாட்டு விழா உட்பட இந்த ஆண்டின் பல சாதனைகளை திரு

> **நாட்டிலேயே முதன்முறையாக முற்றிலும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தியில் இத்தகைய உரம் தயாரிக்கப்பட்டுள்ளது.**
>
> **முனைவர் உதய் சங்கர் அவஸ்தி**
>
> **நிர்வாக இயக்குனர் மற்றும் முதன்மை செயல் அலுவலர், இஃப்கோ**

சங்கானி குறிப்பிட்டார். ஒன்றிய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் முனைவர் மன்சுக் மாண்டவியாவால் புல்பூர் மற்றும் ஆம்லாவில் நானோ யூரியா உற்பத்தி அலகுகளை திறந்து வைத்ததையும் அவர் குறிப்பிட்டார்.

இஃப்கோ நிர்வாக இயக்குனர் முனைவர் உதய் சங்கர் அவஸ்தி கூறுகையில், “ஆத்மநிர்பர் பாரத்” என்ற திரு மோடியின் கனவுக்கு இஃப்கோ நானோ யூரியா ஒரு சிறந்த உதாரணம். அந்தந்த பகுதிகளில் அதை பிரபலப்படுத்த உதவுமாறு அவர் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தினார். ஒரு எடுத்துக்காட்டு, ஜம்மு மற்றும்







## சஹாகாரிதா விருதுகள் வழங்கல்

இஃப்கோ, கூட்டுறவு இயக்கத்திற்கான அதன் அர்ப்பணிப்பில், அடிமட்ட அளவில் இயக்கத்திற்கு பங்களித்த புகழ்பெற்ற கூட்டுறவாளர் களை கவுரவிப்பதற்காக, “இஃப்கோ சஹ்காரிதா ரத்னா” மற்றும் “இஃப்கோ சஹ்கரித பந்து” ஆகிய இரண்டு விருதுகளை நிறுவியுள்ளது. இந்த விருது ₹11 லட்சம் ரொக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரம் கொண்டது. 2021-22 ஆம் ஆண்டிற்கான, ஜே&கே வைச் சேர்ந்த திரு ஹாஜி அலி முகமது வானிக்கு சஹ்கரித ரத்னா விருதும், பீகாரைச் சேர்ந்த திரு நவல் கிஷோர் சிங்குக்கு இஃப்கோ சஹ்கரித பந்து விருதும் வழங்கப்பட்டது.

## “தி ஜாய்ஸ் ஆப் கிரைசிஸ்” மற்றும் “சங்கர்ஷ் கா சுக்” புத்தகங்களின் வெளியீடு

இஃப்கோவின் நிர்வாக இயக்குநரான உதய் சங்கர் அவஸ்தியின் வாழ்க்கையைப் பற்றிய இரண்டு சுயசரிதை புத்தகங்கள் “தி ஜாய்ஸ் ஆப் கிரைசிஸ்” மற்றும் “சங்கர்ஷ் கா சுக்” என்ற தலைப்பில் முறையே ஆங்கிலம் மற்றும் இந்தியில், இஃப்கோ தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழுவால் வெளியிடப்பட்டது. உலக அளவில் முதலிடத்தைப் பிடித்த கூட்டுறவுச் சங்கத்தை வழிநடத்த, கீழ்மட்டப் பின்னணியில் இருந்து வந்த முனைவர் உதய் ஷங்கர் அவஸ்தியின் போராட்டம் மற்றும் முயற்சிகள் இந்தப் புத்தகங்களில் விளக்கப்பட்டுள்ளன.

காஷ்மீரைச் சேர்ந்த ஒரு மண்டல ஆளும் குழு (RGB) உறுப்பினரை அவர் குறிப்பிட்டார், அவர் தனது இருசக்கர உந்துவண்டியில் சென்று அந்தப் பகுதியைச் சுற்றி தினமும் 500 முதல் 1000 குப்பிகளை விற்பனை செய்கிறார்.

இரண்டு தேசிய அளவிலான முன்னேற்பாட்டாளர்களாக உள்ள ஏற்றுமதி மற்றும் விதைகள் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஐந்தில் இஃப்கோவும் ஒன்றாக இருந்து, கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை இஃப்கோ நிறைவேற்றுகிறது.

◆◆◆




# இஃப்கோவின் நானோ யூரியா அமெரிக்காவில் அதிர்வலைகளை உருவாக்குகிறது

## இஃப்கோ மற்றும் கபூர் எண்டர்பிரைசஸ் இன்க்., கலிபோர்னியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

**சஹ்கார் உதய் குழு**

பிரதம மந்திரி திரு நரேந்திர மோடியின் அமெரிக்க விஜயத்திற்கு துணையாக, உலகின் முன்னணி கூட்டுறவு நிறுவனமான இஃப்கோ, உலகின் முதல் நானோ யூரியாவை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது. நானோ யூரியா, இஃப்கோ நிறுவனத்தால் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டு, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. இஃப்கோவின் நானோ யூரியாவை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் இஃப்கோ மற்றும் கலிபோர்னியாவில் உள்ள கபூர் எண்டர்பிரைசஸ் இன்க் இடையே கையெழுத்தானது.

அமெரிக்காவிற்கு நானோ யூரியா ஏற்றுமதி செயலானது, திரு மோடியின் "சஹகர் சே சம்ரித்தி" மற்றும் "ஆத்மநிர்பார் பாரத்" என்ற கனவை நனவாக்கும் ஒரு மாபெரும் படியாகும். இஃப்கோ நானோ யூரியாவின் 500,000 குப்பிகள் ஏற்கனவே 25 நாடுகளுக்கு மேல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. நானோ யூரியா வரலாறின் வளர்ச்சியில் இது ஒரு முக்கியமான வளர்ச்சியாகும், ஏனெனில் அமெரிக்காவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகள் இறுதியில் உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நானோ யூரியா மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து தரத்துடன் உற்பத்தியை அதிகரிக்கிறது மற்றும் இரசாயன உர பயன்பாட்டை குறைக்கிறது. இது காலநிலை மாற்றத்தை கணிசமாக பாதிக்கும் நீர், காற்று மற்றும் மண் மாசுபாட்டைக் குறைத்து நிலையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. இஃப்கோவின் நானோ யூரியா தாவர ஊட்டச்சத்திற்கு பயனுள்ளதாகவும் திறமையாகவும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

**நானோ யூரியா வேளாண்மையில் மாற்றத்தை கொண்டு வருகிறது**

மண்ணில் யூரியாவின் பயன்பாட்டைக் குறைக்கவேண்டும் என்ற திரு மோடியின் அழைப்பிலிருந்து எடுக்கப்பட்ட எழுச்சி இது. நானோ யூரியா, கலோலில் உள்ள நானோ பயோடெக்னாலஜி ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப்பட்ட தனியுரிம தொழில்நுட்பத்தின் மூலம் இஃப்கோவின் விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களால் பல வருட அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையான ஆராய்ச்சிக்குப் பிறகு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டது. நானோ டிஏபி திரவத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் வேளாண்மைத் துறையில் இஃப்கோ மற்றொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது, இது இப்போது உலகெங்கிலும் உள்ள உழவர்கள் அணுகக்கூடியது. இந்த புதுமையான தயாரிப்பு, வழக்கமான டிஏபியை விட மிகவும் குறைவான விலையில் கிடைக்கிறது, இது பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான பயனுள்ள தீர்வை வழங்குகிறது.

கூடுதலாக, நானோ டிஏபி சுற்றுச்சூழலுக்கு உகந்து, தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. பாரம்பரிய டிஏபி மீதான நம்பிக்கையைக் குறைப்பதன் மூலமும், பல்வேறு நிலைகளில் செலவைக் குறைத்து சேமிப்பை வழங்குவதன் மூலமும், நானோ டிஏபி தொழில்துறையில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளது (கேம்-சேஞ்சர்) என்பதை நிரூபிக்கிறது.

அளவுக்கதிகமான யூரியா மற்றும் டிஏபி பயன்பாட்டானது சுற்றுச்சூழல் சீர்கேடு, பலன் தர நீண்டகாலம் எடுப்பது, குறைந்த விளைச்சலை தருவது என்பனவற்றோடு தொடர்புடையது. ஆனால் நானோ யூரியா பயன்படுத்துவதால் பயிரின் உறுதித்தன்மை வளம் பெறுவதோடு ஒட்டு மொத்த பயிரின் வளர்ச்சி மேம்படுகிறது.

**நானோ யூரியாவின் உயர் தரம் ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது**

உலகளாவிய ஆலோசனை நிறுவனமான E&Y இன் அறிக்கை, "ஐந்து குப்பி நானோ யூரியாவைப் பயன்படுத்துவது நட்ட ஒரு மரம் வெளியிடும் பசுமைக்குடில் வாயுவிற்கு சமமான அளவு சேமிக்கிறது" என்று கூறுகிறது. மற்றொரு சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை, "50% நெல் சாகுபடியில் நானோ யூரியா பயன்படுத்தப்பட்டால், அது 4.6 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு சமமான பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும்."

இஃப்கோ நானோ யூரியா திரவத்தின் 500 மில்லி குப்பியில் குறைந்தபட்சம் வழக்கமாக ஒரு மூட்டை யூரியா பயன்பாட்டைக் குறைக்கிறது. குப்பி வடிவில் உள்ள இஃப்கோ நானோ யூரியா, போக்குவரத்து மற்றும் கிடங்குகளின் வாடகையைக் கணிசமாகக் குறைக்கும். அறிமுகமானதிலிருந்து, 5.7 கோடிக்கும் அதிகமான நானோ யூரியா குப்பிகளை இஃப்கோ ஏற்கனவே விற்பனை செய்துள்ளது. நானோ யூரியா மற்றும் நானோ டிஏபி இரண்டும் நிலையான வேளாண்மைக்கு வழிவகுக்கும் மாற்றத்தைக் கொண்டு வரும் கண்டுபிடிப்புகள்.

◆◆◆

## தைவான் தர்பூசணி சாகுபடியில் அளவிற்கு அதிகமான விளைச்சல்




■ உத்தரப் பிரதேசத்தில் உள்ள 17,000 ஊரக பஞ்சாயத்துகளைச் சேர்ந்த ஒரு கோடி உழவர்கள் இந்தப் பயிற்சிக்கூடங்களில் புதிய வேளாண்மை தொழில்நுட்ப முறைகளில் பயிற்சி பெற உள்ளனர்.

# இஃப்கோ கிசான் சேவா கேந்திரா பயிற்சிக்கூடங்களை வெற்றிகரமாக நடத்துகிறது

**எஸ் என் திரிபாதி**

வேளாண்மைத் துறையை லாபகரமான தொழிலாக மாற்றவும், உழவர்களை துயரத்தில் இருந்து மீட்கவும் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் திறமையான தலைமையின் கீழ், உழவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியும், கூட்டுறவுகள் மூலம் மேம்பட்ட வேளாண்மைத் தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் அளிக்கப்படுகின்றன.

தேசிய அளவிலான கூட்டுறவு நிறுவனமான இந்திய உழவர் உரக் கூட்டுறவு (IFFCO) ன் உழவர் சேவை மையங்கள் அத்தகைய இடமாகும். உத்தரபிரதேசத்தில் உள்ள அதன் பாரபங்கி கிளை உழவர் பயிற்சிக்கூடங்களை நடத்துகிறது, இது நாடு முழுவதும் உள்ள உழவர்களுக்கு எழுச்சி அளிக்கிறது. இந்த பாடசாலையில், உழவர்களுக்கு மேம்பட்ட வேளாண்மை முறைகளில் பயிற்சி அளிக்கப்படுவதால், குறைந்த செலவில் பயிர் விளைச்சலை அதிகரிக்க முடியும்.

லக்னோவிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பாரபங்கி மாவட்டத்தில் உள்ள இஃப்கோ உழவர் சேவை மையங்கள், பருவகால பயிர்களைப் பயிர்செய்ய மேம்பட்ட ரகங்களின் விதைகள் வழங்குவது மற்றும் விதை சுத்திகரிப்பு, விதைப்பு நேரம், மண்ணின் தன்மை, உயிரிஉரங்கள், விற்பனை மற்றும் சேமிப்பு பற்றிய தகவல்களை வழங்குவதுடன் அனைத்துப் பகுதிகளிலும் பயிற்சி மற்றும் உதவிகளை வழங்கும் உழவர் பயிற்சிக்கூடங்களை நடத்துகிறது. கடந்த காலங்களில் குறைந்த விளைச்சலையே கண்டுள்ள மாவட்டங்களில் பயிர் விளைச்சலை அதிகரிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

உழவர் உதய் சிங் அப்படிப்பட்ட ஒரு வெற்றிக் கதை.யின் உரிமையாளர். அவரது பயிற்சியின் போது, வாழை செடிகளின் எச்சங்களை உயிரிச் சிதைவுகள்



மூலம் சிதைத்து, வளமான உரமாக பயன்படுத்தலாம் என்பதை அறிந்து கொண்டார்.

இந்த தாவர எச்சங்களில் பல ஊட்டச்சத்துக்கள் உள்ளன என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எச்சத்தை சிதைத்த பிறகு, உழவர் உதய் சிங் தனது பயிர்களில் இஃப்கோ சாகாரிகா, சல்பர் உயிரிச் சிதைப்பான் மற்றும் நீரில் கரையக்கூடிய உரங்களை தெளித்தார்.

தனது பயிர்களின் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். பின்னர் தனது வெற்றிகரமான பரிசோதனையைப் பற்றி உதய் சிங் மற்றவர்களிடம் கூறினார், மேலும் பாரபங்கியின் மற்ற உழவர்களும் பத்து அலகு உயிரிச் சிதைவுகளை வாங்கி அதைத் தங்கள் பயிர்களில் வாழை செடியின் எச்சங்களுடன் பயன்படுத்தினர், அதே அதிசயத்தை அவர்களும் கண்டார்கள்.

பாராபங்கியைச் சேர்ந்த மற்றொரு முற்போக்கு உழவர் மனோஜ் குமார், தனது நெல் வயல்களில் நெல் நாற்று நடும் இயந்திரத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார், அதற்காக முதலில் இயந்திரத்தின் தேவைக்கேற்ப நெல் நாற்றங்காலைத் தயாரித்தார்.

உழவர் பயிற்சிப் பள்ளிக்கூடம் மூலம் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வது குறித்த தகவல் அவருக்கு கிடைத்தது. “தாப்” என்ற கையால் நாற்று நடும் வழக்கத்தை நெல் நாற்று நடும் கருவி மூலம் மாற்றிய மாவட்டத்தின் முதல் உழவர் குமார் ஆவார்.

அதேபோல், நந்த்ராம் வர்மாவும் தனது பயிற்சிக்குப் பிறகு பரிசோதனை செய்தார்.

திரு. நந்த்ராம் அவர்கள் ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞர் என்பதைத் விட அவர் ஒரு முற்போக்கான உழவர். அவர் தைவான் தர்பூசணி விதைகளை விதைத்து, துத்தநாகம், கந்தகம், கால்சியம், நைட்ரேட் மற்றும் போரான் ஆகியவற்றைப் பயன்படுத்தி சாகரிகாவை தெளித்தார். இதன் விளைவாக தைவானிய தர்பூசணிகளின் விளைச்சல் மிகக் கூடுதலாக இருந்தது.

முறையான பயிற்சி மற்றும் தகவல் அளித்தால், புதிய வேளாண்மை முறைகளை வெற்றிகரமாக பின்பற்ற முடியும் என்பதை இஃப்கோ உழவர் சேவை மையத்தின் உழவர் பயிற்சிப்பள்ளி நிரூபிக்கிறது. சரியான திசையில் உழவர்களின் விடாமுயற்சி , மேம்பட்ட தொழில்நுட்ப பயன்பாடு ஆகியவை பயிர் விளைச்சலை அதிகரிப்பதுடன் பயிர்ச்செலவைக் கட்டுப்படுத்தி உழவர்களின் வருமானத்தை அதிகரிக்கிறது.






### பராபங்கியில் உள்ள நிலம் பயிர்களுக்கு மிகவும் பொருத்தமானது

பாரபங்கியில் அனைத்து வகையான பழங்கள் (கொய்யா, மா, வாழை, ஸ்ட்ராபெரி, பப்பாளி மற்றும் தர்பூசணி), காய்கறிகள் (உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், கத்திரிமற்றும்மிளகாய்)மற்றும்பூக்கள் (மரிகோல்டு, ரோஜா, கிளாடியோலஸ் மற்றும் ஜெர்பேரா) ஆகியவை வளரும் ஒரு தனித்துவமான மற்றும் அரிய மாவட்டமாகும். இந்த அனைத்து பயிர்களின் சிறந்த அறுவடைக்கான அனைத்து வகையான தொழில்நுட்ப உதவிகளும் உழவர் பயிற்சிப் பள்ளியில் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன, எனவே அவர்கள் தங்கள் வேளாண்மையை அதிக நம்பிக்கையுடன் பரிசோதனை செய்யலாம்.

### உ.பி. அரசாங்கத்தின் ஒரு பயனுள்ள முயற்சி

இஃப்கோ உழவர் சேவை மையத்தின் இந்த உழவர் பயிற்சிப் பள்ளி உ.பி அரசாங்கத்தின் மிகவும் பயனுள்ள முயற்சிகளில் ஒன்றாகும். 17,000 ஊரக பஞ்சாயத்துகளில் உழவர் பயிற்சிப் பள்ளிகளை ஏற்பாடு செய்து ஒரு கோடி உழவர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இங்கு அதிக வருமானத்துடன், உணவு தானியங்களை அதிக உற்பத்தி செய்வதற்கான தகவல்களும் பயிற்சியும் உழவர்களுக்கு வழங்கப்படும்.

ஓய்வு பெற்ற அதிகாரி IFFCO

◆◆◆

### இடைவெளியைக் குறைத்தல்: ஒளிமயமான எதிர்காலத்திற்காக ஊரகஇளைஞர்களை மேம்படுத்தும் இஃப்கோ இளைஞர் தளம்

# இஃப்கோ ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைக் கண்டறிய உதவுகிறது

**Ank அஞ்சலிதீப்**




- ஊரகங்களில் திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான இஃப்கோவின் ஒரு பெரிய முயற்சி.
- இந்த தளம் இந்தியாவில் உள்ள 15,000 நிறுவனங்களை இணைத்துள்ளது, மேலும் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களையும் அணுகியுள்ளது.

வாய்ப்புகள் மற்றும் தகவல் பற்றாக்குறையால் பல இளைஞர்கள் தங்கள் ஊர்களை விட்டு வெளியேறி வேலை தேடி நகரங்களுக்கு செல்கின்றனர். ஆனால், அவர்கள் தங்கள் சொந்தப் பகுதியில் வேலை கிடைத்தால், அது இந்த இடப்பெயர்வைத் தடுக்கும்.

நேரலைத் திறமை தளமான "Youth4work" இஃப்கோ உடன் இணைந்து, "இஃப்கோ இளைஞர்" தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதும் இதன் முதன்மையான நோக்கம். இளைஞர்களுக்கு சரியான வழிகாட்டுதலை வழங்குவதன் மூலம் இந்தியாவின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு கணிசமான பங்களிப்பைச் செய்து, திறன்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு இடையே வலுவான தொடர்பை ஏற்படுத்த இந்த தளம் பாடுபடுகிறது.

இந்த தளத்தை பயன்படுத்துவதன் மூலம், இளைஞர்கள் தங்கள் திறமைகளை தன்மதிப்பீடு செய்து அவற்றை மேம்படுத்துவதில் உழைக்கலாம். கூடுதலாக, இந்தத்தளம் பல்வேறு நிறுவனங்களின் புதிய தொழில் வாய்ப்புகள் பற்றிய தரவுகளை வழங்குகிறது. இது ஊரக இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை கண்டறியவும், அவர்களின் எல்லைகளை விரிவுபடுத்தவும் உதவுகிறது. சில இணையதளங்கள் வேலை தேடுபவர்களை முதலாளிகளுடன் இணைக்கின்றன, ஆனால் அவை பெரும்பாலும் கட்டணம் வசூலிக்கின்றன. இருப்பினும், இந்த தளங்கள் நகர்ப்புறங்களில் கவனம் செலுத்த முனைகின்றனவே தவிர வேலை தேடும் ஊரக இளைஞர்களுக்கு உதவியாக இல்லை.

ஆனால் இஃப்கோவின் இந்த புதிய முயற்சியால், நகர்ப்புற இளைஞர்களுக்கு இணையான வேலை வாய்ப்புகள் ஊரக இளைஞர்களுக்கும் கிடைக்கும். இந்த தளம் இந்தியா முழுவதும் உள்ள 15,000 நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது மற்றும் அதன் வெற்றியை உறுதிப்படுத்த பல்வேறு வேளாண்மை பல்கலைக்கழகங்களை அணுகியுள்ளது.

ஊரகஇளைஞர்கள் தங்களின் தகுதிகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப இலவச சான்றளிக்கப்பட்ட நேரலை படிப்புகளில் சேர்வதன் மூலம் தங்கள் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்திக்கொள்ளலாம். இந்தப் படிப்புகள் பற்றி நிறுவனங்கள் அறிந்துகொள்ளும் வகையில் உள்ளன, ஆகவே தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புகளை அந்த நிறுவனங்களால் வழங்க முடியும். அலைபேசி பயனர்களும், இளைஞர் தளத்தை எளிதாக அணுகலாம்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் "கணினி இந்தியா" மற்றும் "திறன் இந்தியா" திட்டங்களின் கீழ் ஊரக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஊக்குவிப்பதில் இஃப்கோ முக்கிய பங்கு வகிக்கிறது என்று இஃப்கோ நிர்வாக இயக்குனர் முனைவர் உதய் சங்கர் அவஸ்தி சமீபத்தில்கூறினார்.இந்தத்தளம்திறன் மேம்பாட்டு திட்டங்களை வழங்குகிறது மற்றும் அவற்றை கணினி தளத்துடன் இணைக்கிறது. இந்த முயற்சி இந்தியா முழுவதும் உள்ள ஊரகங்களில் உள்ள கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இஃப்கோ இளைஞர்கள் தளம், நிபுணத்துவம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவால் பராமரிக்கப்படுகிறது. பல இணையதளங்களைப் போல் இல்லாமல், பதிவு எவருக்கும் திறந்திருக்கும், மேலும் கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை.

"இந்தியாவின் ஊரகங்களில் வசிக்கும் உழவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு பயனளிக்கும் வகையில் ஒரு புதிய தளத்தை நாங்கள் தொடங்கியுள்ளோம் என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இது ஊரக இளைஞர்களுக்கு கல்வி, அதிகாரம் திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான தளத்தை வழங்கும். இது ஊரக இளைஞர்களுக்கான இலவச சேவை" என்று முனைவர் அவஸ்தி கூறினார்.

உதவி மேலாளர் (பொது உறவுகள், IFFCO)

◆◆◆



# ஊரக இந்தியாவை மேம்படுத்துதல்

சந்தீப் ரோக்டே

- சதாரா உழவர் நண்பர்கள் சங்கம் உழவர்களின் செயல்திறனை அதிகரிக்கிறது.
- உழவர்கள் மதிப்புமிக்க தகவல்களை வாட்ஸ்அப் குழு மூலம் பெறுகின்றனர்.

ஒரு நல்ல நண்பர் பெரும்பாலும் நூலகத்துடன் ஒப்பிடப்படுகிறார், மேலும் இஃப்கோ தனது வேளாண்மை நண்பர்களுக்காக இந்த ஒப்பீட்டை உண்மையாக்க தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. இஃப்கோ உழவர் நண்பர்கள் குழு மூலம், இந்த கூட்டுறவு சங்கமானது அறிவைப் பரப்புவதற்கும், இந்திய உழவர்கள் மற்றும் ஊரகமக்களை தன்னிறைவு பெறுவது மற்றும் நம்பகத்தன்மையை வலுவூட்டுவதற்கும் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. உழவர்களிடையே சொந்தம் மற்றும் தொடர்பை வளர்ப்பதற்காக பல்வேறு செயல்பாடுகளை இக்குழு ஏற்பாடு செய்து, அவர்கள் இஃப்கோ குடும்பத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உணருவதை உறுதி செய்கிறது.

இஃப்கோ உழவர் நண்பர்கள் குழுவின் இன் முதன்மையான கவனம் வேளாண்மைத் துறையில் புதிய முறைகள் மற்றும் நுட்பங்களைப் பற்றி உழவர்களுக்குக் கற்பிப்பதாகும். இஃப்கோ வழங்கும் புதிய மற்றும் மிகத்தேவையான தயாரிப்புகளை இக்குழுவின் உழவர்கள் மற்றும் ஊரக சமூகங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த இடைவினைகள் இஃப்கோ மற்றும் உழவர்களுக்கு இடையே இருவழித் தொடர்பை எளிதாக்கி, குழு உறுப்பினர்களிடையே வலுவான பிணைப்புகள் மற்றும் நீடித்த உறவுகளை மேம்படுத்துகிறது.

இத்தகைய முயற்சிகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம் மகாராஷ்டிராவில் உள்ள சதாரா உழவர் நண்பர்கள் குழு. இப்பகுதியில் உள்ள உழவர்கள் பருவக்காலத்தில் அத்தியாவசிய உழவுப் பணிகளை மேற்கொள்வதில் மும்முரமாக இருப்பதால், கோரேகாவ்ன் தாலுக்காவில் உள்ள ஏகாம்பே என்ற ஊரிலும் கராட் தாலுக்கா பாலி என்ற ஊரிலும் இரண்டு உழவர் கூட்டங்களை இஃப்கோவின் சதாரா அமைப்பு இரவு நேரத்தில் நடத்தி ஓர் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த கூட்டங்களின் நோக்கம் உழவர்களுக்கு புதுமையான தொழில் நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். மேலும், இந்த உழவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், இஃப்கோவின் தயாரிப்பு வரிசை பற்றிய தகவல்களை அவர்களுக்கு வழங்கவும் ஒரு வாட்ஸ்ஆப் குழுவை இக்குழு நிறுவியுள்ளது. இதுவரை, இந்த உழவர்களுடன் தனிப்பட்டமுறையில் இரண்டு சந்திப்புகள் நடந்துள்ளன.

அறிவைப் பகிர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், 'சங்கட் ஹரன் பீமா யோஜனா'(சங்கடங்கள் தீர்க்கும் காப்பீட்டு திட்டம்) இன்சூரன்ஸ் பாலிசி, உழவர்களுக்கு தகவலறிந்த முடிவுகளை எடுப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது. உரங்களின் சரியான பயன்பாடு, பொறுப்பான வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவித்தல் பற்றி உழவர்களுடன் உரையாடல்களிலும் இக்குழு ஈடுபட்டுள்ளது.

உழவர்களின் ஆர்வத்தை மேலும் மேம்படுத்துவதற்கும், நிலைநிறுத்துவதற்கும்,இஃப்கோ சதாரா, திட்ட விவாதங்களின் அடிப்படையில் வினாடி வினாக்களை நடத்துதல் மற்றும் வெற்றி பெற்ற உழவர்களுக்கு சாகரிகா மற்றும் உயிரி உரங்களை வழங்குதல் போன்ற புதிய அணுகுமுறைகளை செயல்படுத்தியுள்ளது.

இஃப்கோ குடும்பத்தைப் பொறுத்தவரை, மக்களுக்கு ஆதரவளிப்பது அவர்களின் அவசியத் தேவையாக உள்ளது. உழவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை நிறைவு செய்ய இஃப்கோ சதாராவில் எடுத்த பல நடவடிக்கைகள் அதன் முன்முயற்சியாக எடுத்துக்காட்டுகிறது. இஃப்கோவில் உள்ள அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள், இந்தியாவில் ஊரகவளர்ச்சியை முன்னேற்றுவதற்கு முழுமையாக அர்ப்பணிப்புடன் உள்ளனர்.

உதவி பகுதி மேலாளர்,
சதாரா, இஃப்கோ

◆◆◆

# இந்திய பண்ணை வன வளர்ச்சி கூட்டுறவு திட்டம் சியுலா பெண்களின் வாழ்க்கையை மாற்றுகிறது



**மது சிங்**

- பணப்பைகள் மற்றும் சுவரில் தொங்கும் அழகான வடிவமைப்புகள் செய்ய பெண்கள் திறன் பயிற்சி பெறுகிறார்கள்.
- சியுலா பெண்கள் திறன் பயிற்சியால் பலம் பெறுகிறார்கள்.
- புவனேஸ்வரின் பிபிலி பஜார் உள்ளிட்ட முக்கிய சந்தைகளில் பெண்களால் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் விற்கப்படுகின்றன.

புவனேஸ்வரில் இருந்து சுமார் 31 கி.மீ தொலைவில் உள்ள பிபிலி பஜார், அங்கு விற்கப்படும் தென்னை நாரால் செய்யப்பட்ட விலங்கு சிலைகள், கையால் செய்யப்பட்ட பொம்மைகள், அழகான பணப்பைகள் மற்றும் சுவரில் தொங்கும் அழகு பொருட்கள் போன்ற அழகிய கைவினைப் பொருட்களை வாங்க சுற்றுலாப் பயணிகள் குவிகின்றனர். இந்த தயாரிப்புகள் சியுலா ஊரகத்தில் உள்ள ஜன்-ஜாக்ரன் மற்றும் மா ஜோகேஸ்வரி சுயஉதவி குழுக்களின் (SHGs) பெண் உறுப்பினர்களால் தயாரிக்கப்படுகின்றன. இஃப்கோ ஊரக வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் (RLDP) கீழ் இந்திய பண்ணை வனவள மேம்பாட்டு கூட்டுறவு லிமிடெட் (IFFDC) இந்த வறுமையில் வாடும் பெண்களுக்கு திறன் பயிற்சி அளித்தது, இது இப்போது அவர்களின் வாழ்க்கையில் ஒரு அற்புதமான மாற்றத்தை கொண்டு வந்துள்ளது.

ஒடிசா மாநிலம் பூரி மாவட்டத்தில் உள்ள பிபிலி தொகுதியில் உள்ள சியுலா ஊரானது மொத்தம் 396 குடும்பங்களைக் கொண்ட ஒரு சிறிய ஊரகம். வேளாண்மையும் தினக்கூலியும் அங்கு முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது. அங்கு வசிக்கும் பெண் சூடாமணி ஜைனா, கடும் முயற்சியால் ஜன் ஜாகரன் மற்றும் அம்மா ஜோகேஸ்வரி ஆகிய இரண்டு சுய உதவிக் குழுக்களை அங்கு நிறுவினார். திருமதி சூடாமணி முன்பு குடும்ப வேளாண்மையில் ஈடுபட்டிருந்தார், ஆனால் 2006 இல்




ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தால், அவரது வயல்கள் முற்றிலும் அழிக்கப்பட்டன. இருப்பினும், அவர் உறுதியை இழக்கவில்லை . ஒரு சிறிய மகளிர் குழுவை உருவாக்கினார். தொடக்கத்தில், குழு உறுப்பினர்கள் ஒரு உறுப்பினருக்கு ரூ.20 மாதாந்திர சேமிப்பை சேர்த்து வங்கிக் கணக்கைத் தொடங்கினார்கள். படிப்படியாக, அவர்களின் சேமிப்பு ரூ.9 லட்சமாக உயர்ந்தது மற்றும் உறுப்பினர்கள் இந்தக் கணக்கில் இருந்து 24% ஆண்டு வட்டி விகிதத்தில் கடன் பெறத் தொடங்கினர்.

இஃப்கோ ஊரக வாழ்வாதார மேம்பாட்டு திட்டம் பின்னர் உதவிக்கரம் நீட்டி, 26 குழு உறுப்பினர்களுக்கு கைவினைக் கலை குறித்த இரண்டு மாத வடிவமைப்புமேம்பாட்டுப்பயிற்சியை வழங்கியது. பணப்பைகள் தயாரித்தல், சுவரில் தொங்கும் அழகுப்பொருட்கள், பல்வேறு வகையான தேங்காய் பொம்மைகள் மற்றும் பிற கைவினைப்பொருட்கள் தயாரிப்புமுறை கற்பிக்கப்பட்டன. பயிற்சிக்குப் பிறகு, இந்த உறுப்பினர்கள் தங்கள் சேமிப்பை எடுத்து மூலப்பொருட்களை வாங்கினார்கள். கூட்டாக, பிபிலி சந்தையில் தங்கள் பொருட்களை விற்க ஆரம்பித்தனர். இதனால், அவர்கள் முதன்முறையாக சம்பாதிக்கத் தொடங்கி, நிறைய தன்னம்பிக்கையைப் பெற்றனர்.

படிப்படியாக, ஊரகத்தில் ஐந்து சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஜன் ஜாக்ரன் மகிளா பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தை நிறுவ இஃப்கோ இந்த சுய உதவிக்குழுக்களுடன் இணைந்தது. இந்த கூட்டுறவு விரைவில் அருகிலுள்ள சந்தையில் நம்பகத்தன்மையைப் பெற்றது. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் பேங்க் ஆஃப் பரோடா ஆகிய இரண்டு வங்கிகளும் தங்கள் பணியைத் தொடர மொத்தம் ரூ. 55 லட்சம் கடனாக அளித்தன, அவை ஏற்கனவே சரியான நேரத்தில் திருப்பித் செலுத்தப்பட்டுள்ளன. கமிட்டியின் தலைவி திருமதி சூடாமணி ஜைனா தனது ஊரகத்தில் உள்ள படிப்பறிவற்ற பெண்கள் தேசிய அளவிலான இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் சந்தை மற்றும் தொகுதி, மாவட்ட மற்றும் மாநில அளவிலான கண்காட்சிகள் மற்றும் சந்தை கடைகளில் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதாக பெருமையுடன் கூறினார். அவர்கள் பிபிலி பஜார், பூரி பஜார், தேவாலயங்கள் மற்றும் பிற இடங்களில் இருந்து தொடர்ச்சியான ஆர்டர்களைப் பெற்றனர்.

2021-2022 ஆம் ஆண்டில், இந்திய பண்ணை வன வளர்ச்சி கூட்டுறவுக் கழகம் (IFFDC), ஒடிசா அரசின் கைவினைப் பொருட்கள் இயக்குநரகத்தின் முயற்சிகள் மற்றும் உதவியின் மூலம், புவனேஸ்வரில் உள்ள தேசிய தோஷாலி கைவினைப் பொருட்கள் கண்காட்சியில் தங்கள் தயாரிப்புகளின் விற்பனை மற்றும் கண்காட்சிக்காக இக்குழுவால் ஒரு கடை அமைக்கப்பட்டு 10 நாட்களில் இரண்டு லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது . 'உத்கலிகா கைத்தறி' மற்றும் 'கைவினை ஒரிசா' வையும் தொடர்பு கொண்டு, இந்த கைவினைப் பொருட்களை வழக்கமாகச் சந்தைப்படுத்துவதற்கு இந்திய பண்ணை வனவளர்ச்சி கூட்டுறவுக் கழகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

துணை மேலாளர்,
சந்தைப்படுத்தல், IFFCO

◆◆◆



தனஞ்சய் குமார் சிங்

# இந்தியாவின் எதிர்காலத்தை மேம்படுத்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் கூட்டுறவுகள்

இளைஞர் சக்தி மற்றும் புதுமையான திறன்கள் நிறைந்த இந்தியா, இன்று உலக அரங்கில் வளர்ச்சியின் தனித்துவமான வரைவினை எழுதி வருகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்து 75வது ஆண்டைக் குறிக்கும் வகையில் இன்று 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' கொண்டாடுகிறோம். நவீன அறிவியல், கணினி, மருத்துவம் மற்றும் நானோ தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இந்திய இளம் விஞ்ஞானிகள் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் முத்திரை பதித்துள்ளனர். முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன், பெங்களூரு விஜயத்தின் போது, இந்திய கணினி விஞ்ஞானிகள் இல்லாமல் அமெரிக்காவில் கணினி அறிவியல் முழுமையடையாது என்று இந்திய இளைஞர்களைப் பாராட்டினார்.

இந்தியா 22 ஆண்டுகளுக்கு முன்பு தொழில்நுட்பம் மற்றும் நவீன கருவிகளுக்கு வெளிநாடுகளை நம்பியிருந்தது. இருப்பினும், இன்றைய இளைஞர்கள் வெற்றிகரமான இந்திய கண்டுபிடிப்புகளை உருவாக்கி, அவற்றை நாட்டிற்குள் திறம்பட செயல்படுத்துவதன் மூலம் பிரதமர் திரு நரேந்திர மோடியின் "ஆத்மநிர்பர் பாரத்" என்ற தொலைநோக்கை அடைகின்றனர். திரு மோடியின் 'மேக் இன் இந்தியா' பிரச்சாரத்தின் கீழ், தகவல் தொழில்நுட்பத் துறையில் 10,000 இளங்குழுமங்களும், சுகாதாரம் மற்றும் வாழ்க்கை அறிவியலில் 8,000 இளங்குழுமங்களும் தொடங்கப்பட்டன.

திறமையாளர்களின் உலக தலைமையிடமாக இந்தியாவைக் கட்டமைக்கும் பணியில் "இந்திய திறமையாளர்கள் பணி" என்ற தொடர்பயணத்தில் இந்திய இளைஞர்களை ஆளுமைத்திறனுள்ளவர்களாக்கும் நோக்கத்தோடு, திறமை, திறன் மேம்படுத்தும் பயிற்சி, பட்டம், பட்டயப் படிப்புகளை, கல்லூரி, பல்நோக்குப் பயிற்சிக்கூடங்கள், தொழிற்பயிற்சிக் கூடங்கள் ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இதன் நேர்விளைவாக கல்வியும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் செயல்படுகிறது. பிரதமர் திரு மோடி அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட கூட்டுறவுத்துறை அமைச்சகம், உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு ஷா அவர்களின் வழிகாட்டுதல் படி இளைஞர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வழியே வேலை வாய்ப்பினை வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அந்த ஊரகங்கள் மேன்மைய அடைவதற்கான வழியை இளைஞர்களின் ஒத்துழைப்பின் மூலம் சாதித்துள்ளது.

1960களில், இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் ஐந்தாண்டுத் திட்டங்களில் அதன் முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கியது. பால் மற்றும் உணவு தானியங்களில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்த வெண்மை மற்றும் பசுமைப் புரட்சியின் தந்தையாக விளங்கும் இந்த இயக்கம் மாநில அரசுகளின் தேவையற்ற தலையீட்டால் நிறுத்தப்பட்டது. அரசுகளின் குறுக்கீடு அதிகரித்துள்ள அனைத்து மாநிலங்களிலும் கூட்டுறவு நிறுவனங்கள் கடும் நஷ்டத்தை சந்தித்தன.

"சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) என்ற திரு மோடியின் தொலைநோக்குப் பார்வை மூலம் கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்புடைய மக்களின் வாழ்க்கையில் நேர்மறையான மாற்றத்தை கொண்டு வருவதற்கு தற்போதைய அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது, அதை புதுப்பித்து, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி, ஊரகங்களை செழிப்பாக மாற்றியது. கூட்டுறவுத்துறை அமைச்சகத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது ஒரு வரலாற்று முடிவாகக் கருதப்பட்டது. நாட்டின் முதல் கூட்டுறவு மந்திரியாக கூட்டுறவு இயக்கத்திற்கு உயிர் கொடுத்தவர் திரு ஷா. முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்களை (பிஏசிஎஸ்) கணினிமயமாக்குவது, அவற்றைப் பல்நோக்கு சங்கங்களாக உருவாக்குவது, அதிக வெளிப்படைத்தன்மைக்கு மென்பொருளைப் பயன்படுத்துவது போன்ற நாட்டின் கூட்டுறவு சங்கங்கள் எடுத்த இதுபோன்ற எளிய முடிவுகள் இந்த இயக்கத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்தன.

இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் (NCUI) நடத்தும் பயிற்சித் திட்டங்களில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. "சஹகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) யை உணர விரும்பும் நிறுவனங்கள், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் இளைஞர்களை சென்றடைகின்றன. பல்கலைக்கழகங்கள் மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்ட பிறகு பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இளைஞர்கள் வாழ்வாதாரத்திற்காகத் தங்கள் சொந்த ஊருக்கு திரும்புவதற்கான வாய்ப்பை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வழங்குகின்றன, மேலும் ஊரக அளவில் உருவாக்கப்பட்ட பி.ஏ.சி.எஸ் நுண்கடன்களை வழங்குவதன் மூலம் கூட்டுறவுத் தொழில்முனைவோர் தொழில் தொடங்க உதவுகிறது. பயிற்சி பெற்ற இந்திய இளைஞர்கள், வேலை தேடுவது மட்டுமின்றி, கூட்டுறவு சங்கங்களை புதுமையைத் தழுவி நிறுவுவதன் மூலம், தங்களுக்கான வேளையைத் தேடிக்கொள்வது மட்டுமல்லாது தங்கள் நண்பர்களுக்கும் வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையை உருவாக்குகிறார்கள்.

என்.சி.டி.சி இன் "யுவ சஹாகார்" மற்றும் "நந்தினி சஹாகார்" திட்டங்களின் கீழ், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்புகள், நிதி உதவி மற்றும் பயிற்சி வழங்கும் பணிகள் லட்சுமணராவ் இனாம்தார் தேசிய கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அகாடமி (LINAC) மூலம் செய்யப்படுகிறது. அதன் 18 மண்டல அலுவலகங்கள் நாடு முழுவதும் பரவியுள்ளன.

உத்தரகாண்ட், உத்தரபிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில், "சஹாகர் பாரதி கங்கா" மற்றும் "சஹாகர் கிராம் யோஜனா" போன்ற செயலாக்கக்கூடங்கள் போன்ற அமைப்புகள் மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு, கூட்டுறவுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவர்களுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன் மூலம் மத்திய, மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்கள் இளைஞர்களை சென்றடைகிறது. இதனால், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான பாதை அமைக்கப்படும், மேலும் "சஹாகர் சே சம்ரித்தி" (கூட்டுறவு மூலம் வளர்ச்சி) கருத்து உணரப்படும்.

இயக்குனர், என்.சி.டி.சி ◆◆◆



மத்திய அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் கூட்டுறவு அமைச்சகம் எடுத்துள்ள தீர்க்கமான நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய கூட்டுறவுத் துறை இணை அமைச்சர் திரு பி.எல். வர்மா தகவல் அளித்தார்.



என்எப்எல், விஜயப்பூர் அலகில், மிஷன் லைஃப் திட்டத்தின் கீழ் நகர்புரக் குடியிருப்பாளர்களுக்காக சைக்ளோதான் நடத்தப்பட்டது. அலகின் தலைவர் திரு பங்கர், ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மற்றும் CISF பணியாளர்களுடன் சைக்ளோதானில் பங்கேற்றனர்.




மத்தியப் பிரதேசத்தில் நரசிங்பூர் மாவட்டத்தின் சிச்லி தாலுகாவில், மத்திய அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நானோ உரங்களின் பயன்பாடு குறித்து இஃப்கோ நிபுணர்கள் மூலம் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு விளக்கங்கள் உழவர்களுக்கு அளிக்கப்பட்டது.



இஃப்கோ மகாராஷ்டிரா மாநிலம் ஜல்காவுனில் நானோ யூரியா மற்றும் இஃப்கோ நானோ டிஏபி பயிற்சித் திட்டத்தை இஃப்கோ நடத்தியது. இந்த நிகழ்ச்சியில், 75 உழவர்கள் வழக்கமான யூரியா பயன்பாட்டை 50% குறைத்து அதற்கு பதிலாக நானோ யூரியாவை பயன்படுத்துவது என்ற உறுதிமொழி எடுத்தனர்.



இஃப்கோ கண்ட்லா அலகைச் சேர்ந்த மெஹக் ஜடேஜா 11 வது அலகின் பண்பாட்டு விழாவில் சிறப்பாக செயல்பட்டதற்காக சர்வஷ்ரேஷ்டா கலகர் விருது பெற்றார். இந்த நிகழ்ச்சி இஃப்கோ புல்பூர் அலகில் (பிரயாக்ராஜ்) ஏற்பாடு செய்யப்பட்டது.




பீகாரில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான முன்மாதிரியான பணிக்காக திரு நவல் கிஷோர் சிங்கிற்கு இஃப்கோ கூட்டுறவு உறவினர் விருது வழங்கப்பட்டது.

கூட்டுறவுகள் தன்னம்பிக்கைக்கு சிறந்ததோர் முன்மாதிரி. ஒரு கூட்டுறவின் மிகப்பெரிய பலம் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு ஆகும். 'ஆசாதி கா அம்ரித் காலில்' இந்தியாவின் வெற்றிக்கான உத்தரவாதம் இதுதான். 'அமிர்த காலில்' சிறியவர்களாகக் கருதப்பட்ட மற்றும் குறைத்து மதிப்பிடப்பட்டவர்களுக்கு ஆளுமைத்திறன் அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். சிறு உழவர்கள் இன்று எல்லா வகையிலும் ஆளுமை பெற்றுள்ளனர்.

**திரு நரேந்திர மோடி**
**பிரதமர்**



## இஃப்கோ நானோ யூரியா (திரவ) மற்றும் இஃப்கோ நானோ டிஏபி (திரவ)




இஃப்கோ நானோவின் சபதம்,
அதிக லாபம், குறைந்த விலை.




IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives

# இந்திய உழவர்கள் உர கூட்டுறவு லிமிடெட்

இஃப்கோ சதன், சி-1, மாவட்ட மையம், சாகேத் பேலஸ், புது தில்லி-110017

Postal Registration No.: DL(S)-17/3559/2023-25
Published on 10-07-2023 Applied for RNI Registration/Exempted for Six Months vide ADG Posts Letter No.22-1/2023-PO, dt.21-04-2023